உவமான சங்கிரகம்

(உவமைத் தொகுப்புகள் பற்றிய ஆராய்ச்சி)

டாக்டர் இ. சுந்தரமூர்த்தி
தமிழ் விரிவுரையாளர்
சென்னைப் பல்கலைக் கழகம்

தென்மொழி நூலகம்
கோவை

உவமான சங்கிரகம்

(உவமைத் தொகுப்புகள் பற்றிய ஆராய்ச்சி)

டாக்டர் இ. சுந்தரமூர்த்தி
தமிழ் விரிவுரையாளர்
சென்னைப் பல்கலைக் கழகம்

தேன்மொழி நூலகம்
கோவை

முதற்பதிப்பு 1980

விலை ரூபாய் மூன்று

நூல் கிடைக்குமிடம்
பாரி நிலையம்
பிரகாசம் சாலை
சென்னை 600 001

மக்கள் அச்சகம் சென்னை 600 002

முன்னுரை

தமிழ்மொழி ஆய்வில் அணியிலக்கண வரலாறு குறித்து
்தியாக ஆராய்ந்தால் கவிதை நயத்திற்கு அணி தரும்
டை நன்கு தெளிவாகும். கவிஞனின் வெளிப்பாட்டு
ர்ச்சியைப் பெரிதும் எளிமையாக்குவது உவமையே
ம். படைப்போன் தரும் உவமைப் பொருட்களைத்
ுத்துப் பார்க்கும் முயற்சியை முன்னையோர் தொடங்கி
தனர். ஆனால் அம்முயற்சி தொடர்ந்து நடைபெற
ு. உவமான சங்கிரக நூல்கள், இரத்தினச் சுருக்கம்,
வகை இலக்கணம், பிரபந்தத் திரட்டு முதலாயவை
மைத் தொகுப்பின் விளைவாக எழுந்த நூல்களாகும்.
ியிலக்கண வளர்ச்சியில் இத்தொகுப்பு பெரிதும் குறிப்
் தகுந்தது.

அணியிலக்கண வளர்ச்சி குறித்து மேலும் ஆய்வு நூல்கள்
பதற்கு இந்நூல் துணையாக அமையும் என நம்பு
றேன்.

இ. சுந்தரமூர்த்தி

உள்ளுறை

உவமான சங்கிரகம்-1

அடி

1 அம்புயஞ் சுணங்கனுக் கனிச்சமா ந் தளிரிணை
செம்பஞ்சு முயல்வயின் செயலையுள் ளடிக்கே (1)

கால் விரல்

2 பவளக் கொம்பும் பசுமஞ்சண் முளையு
முவமையாங் கால்விர லொரு பத்தினுக்கே (2)

உகிர்

3 படிகந் தாரகை பத்தாய் மதியிணை
கடைதலொப் பாமெனக் கண்டன ருகிர்க்கே (3)

---

1 அம்புயம்-தாமரை, சுணங்கன் நாக்கு-நாயின் நாக்கு, அனிச்சம், மாந்தளிர், செம்பஞ்சு, முயல் வயிறு, செயலை—அசோகந்தளிர்

2 பவளக்கொம்பு, பசுமஞ்சள் முளை

3 படிகம், தாரகை, மதி-பிறைக்கீற்று

புறவடி

4 பைத்திடு கமுகமும் பாளையுங் கமடமும்
பொத்தகச் சுவடும் புறவடிக் கிணையே (4)

கரடு

5 பாளையுட் குரும்பையும் பந்துந் தராசுங்
காளை மிலிப்பியுங் கரட்டினுக் கனைத்தே (5)

குதிங்கால்

6 தூரியப் பெட்டி பந்தொடு மாங்கனி
..............கி லொப்பெனும் பெருங்குதிங் காற்கே (6)

கணைக்கால்

7 வேணுவுந் தேன்பூ விரிகா களமுந்
தூணியும் வராலுஞ் சொலுங் கணைக் காற்கே (7)

முழந்தாள்

8 அலவன் பசுமுக் காள (?) யா ழெனும்பணி
குலவுங் கேடகக் குமிழ்முழந் தாட்கே (8)

துடை

9 துதிக்கையுந் தெற்பமுந் தூணெடு கம்பமுஞ்
சதுரப்பெ ருவாழையுட் டண்டுமாந் துடைக்கே (9)

---

4 கமுகம், பாளை, கமடம்-ஆமை, புத்தகக்கட்டு.

5 குரும்பை, பந்து, தராசு, இப்பி-சிப்பி.

6 தூரிகைப் பெட்டி, பந்து, மாங்கனி

7 வேணு-மூங்கில், தேன்பூ(?), காகளம், தூணி, வரால்

8 அலவன்- நண்டு, பசுமுக்கு, கேடகக்குமிழ்

9 துதிக்கை, தெற்பம்-தற்பம்-மெத்தை(?), தூண், கம்பம், வாழைத்தண்டு,

அல்குல்

10 அரசிலை பாற்கட லரவுதென் கூபந்
தருணவெற் றிலைதேர்த் தட்டு வேள்மணிப்
பொக்கிஷம் வாழையின் பூமடல் பொற்றட்
டெக்கு (?) மான் குளம்(பே) யிந்திர பதநிலந்
தாமரை மணித்தலஞ் சங்கநி தியுமேவா
டாமதுக் குழாய்மத னாலவட் டந்தேன்
கூடுகாக் கணம்பூக் குளமடை விளக்குட
னுடற் பரிச்செவி யமுத சருக்கரை
தோரண பதக்கந் துதிசத்தி பீடஞ்
சோரணி முப்பதுஞ் சொல்வரல் குலுக்கே (10)

இடை

11 துடியொடு பிடிமின் சுருதிவேள் சிங்கங்
கொடி துரும் பிளவஞ்சி குலிசமா மிடைக்கே (11)

வயிறு

12 ஆலந் தளிர்குருத் தரம்பை சேம் பிலைமதி
கோங்கு நீர் பாதி(?) கொண்டிடும் வயினே(ற) (12)

உந்தி

13 வட்டச் சோதியு மல்லிகை வலம்புரி
மொட்டுநீர்ச் சுழியு மொழிவ ருந்திக்கே (13)

---

10 அரசிலை, பாற்கடல், அரவு, கூபம்-கிணறு, வெற்றிலை, தேர்த்தட்டு, வேள்மணிப் பொக்கிஷம், வாழையின் பூ மடல், பொன்தட்டு, மான்குளம்பு, இந்திரபதம், நிலத்தாமரை, மணித்தலம், சங்க நிதி, வாடாமதுக் குழாய், மதன் ஆலவட்டம், தேன்கூடு, காக்கணம்பூ, குளமடை, விளக்கு, பரிச்செவி, அமுதம், சருக்கரை, தோரணம், பதக்கம், சத்திபீடம்.

11 துடி, பிடி, மின், சுருதி, வேள், சிங்கம், கொடி, துரும்பு, இளவஞ்சி, குலிசம்-வச்சிராயுதம்,

12 ஆலந்தளிர், குருத்து, அரம்பை-வாழை, சேம்பிலை, மதி, கோங்குநீர்,

13 வட்டச்சோதி, மல்லிகை, வலம்புரிச்சங்கு, மொட்டு, நீர்ச்சுழி

உரோமத்தொழுங்கு

14 மால்கிடை சங்கிலி மதனு ளெறும்பொழுக்
காலிலை நடுநரம் பானையின் றுதிக்கை
கரும்பா மிளநீர்க் காம்பிரு ளொதுக்கு
மருங்குநா ராச மததாரை தேர்வட
மண்டபச் சார மதத்தார் களபத்
தண்டுளித் தாரைவான் ருரைவார்க் கயிறு
கண்ணெளி பாய்தல் கருமணிக் கோவையென
வொண்பயின் மடிபடிப் புரோமத் தொழுங்கே (14)

முலை

15 சந்திரன் சூரியன் ருமரை முகமணி
பந்திள நீர்வெற் பானைமத் தகமருப்
பிளநீ ரெலுமிச் சிளநீ ரிலந்தை
செப்பிணை புன்னை யிலிங்க மும்வரு
சக்ரவா கம்வில் வக்கனி மாதுளங்
கனி விளாங் கனிசிமிழ்க் கரகங் கிரீடமாங்
கனிசெண்டு சூதுடன் களஞ்சுகைத் தாளங்
கோங்குமா விலங்கு குமிழி கரண்டகந்

---

14 மால்கிடை, சங்கிலி, மதனுள், எறும்பொழுக்கு, ஆலிலை, நடுநரம்பு, ஆனையின் துதிக்கை, கரும்பு, இளநீர்க் காம்பு, இருள் ஒதுக்கு, மருங்கு, நாராசம்-சலாகை, மததாரை, தேர்வடம், மண்டபச்சாரம், மதத்தார் களபம், தண்துளித் தாரை, வான்தாரை, வார்க்கயிறு, கண்ணெளி பாய்தல், கருமணிக் கோவை

15 சந்திரன், சூரியன். தாமரை முகம், மணி, பந்து, இளநீர், வெற்பு, ஆனைமத்தக மருப்பு, எலுமிச்சை, இலந்தை, செப்பிணை, புன்னை, இலிங்கம், சக்ரவாகம், வில்வக்கனி, மாதுளங்கனி, விளாங்கனி, சிமிழ், கரகம், கிரீடம், மாங்கனி, செண்டு, சூது, களஞ்சு, கைத்தாளம், கோங்கு, மாவிலங்கு, குமிழ், கரண்டகம், தேங்காதுருவம், செழுங்கதலிப்பூ, கொட்

தேங்கா துருவஞ் செழுங்கத லிப்பூக்
கொட்டைப் பாக்கொடு கூடாரம் வள்ளம்
பட்டைப் பம்பர மருந்துண்டை பொற்றேர்
கோபுரத் தூவிசெங் கோழியண் டங்குடஞ்
சோபனக் கிம்புரி துணைப்பிடி செப்புடன்
செய்யுங் கொத்தளஞ் சேவின் புறச்சிமி
ழையொன் பானென் ருமுலை யினுக்கே (15)

கைவிரல், உகிர்

16 அலரிமுத் திரைக்கோ லணிப வளக்கொம்
புலவிய திறவுகோ லுற்றமாந் தளிரொடு
கெளிறும் பயறுங் (?) கிட்டிய கைவிரல்
பழகிய வுகிர்க்குப் பைங்கிளி மூக்கே (16)

அங்கை, முன்கை

17 காந்தளுங் கமலமுங் கருதுசித் திலதமுங் (?)
கூர்ந்த வங்கைக்கு யாழ் கோடு முன்கைக்கே (17)

தோள்

18 பூரண கும்பமேற் போட்ட மாலிகை
வெயாருறும் படஞ்சனை யணையவாந் தோட்கே (18)

டைப் பாக்கு, கூடாரம், வள்ளம், பட்டைப்பம்பரம், மருந்துண்டை, பொற்றேர், கோபுரம், தூவி, செங்கோழி அண்டம்-செங்கோழி முட்டை, குடம், சோபனக் கிம்புரி, துணைப்பிடி, செப்பு, கொத்தளம், சேவின்புறச்சிமிழ்

16 கைவிரல் : அலரி, முத்திரைக்கோல், பவளக்கொம்பு, திறவுகோல், மாந்தளிர், கெளிறு, பயறு.
உகிர் : பைங்கிளி மூக்கு

17 அங்கை : காந்தள், கமலம், சித்திலிதம்
முன்கை : யாழ், கோடு

18 பூரணகும்பமேற்போட்ட மாலிகை

கழுத்து

19 மணிப்பா லிகைச்சுருள் மடற்சூர்க் கமுகுபூ
சணிப்பூச் செப்பொடு சங்குமாங் கழுத்தே (19)

இதழ்

20 படிமக் கமலமும் படிமமுந் திங்களுந்
தடமுஞ் சேண்டிப்பூத் தட்டுமா முகமே
தூதுளை செந்தமிழ்த் தொண்டைசெவ் வாம்பல்
மாதுளை வீழிசெம் மரத்தில விரந்தை(?)
முருக்குப் பவள முதிரிந்த்ர கோபந்
த...செங் கமலந் தளிர்நெல் லுறைமால்
கண்ணுட னமுதக் கடிகைசொற் கதவமென்
றெண்ணிரண் டாகு மிதழ்க்குவ மைகளே (20)

நகை

21 முத்துமா துளம்விரை முருந்துபூங் கருநாவித்
தளவொடு பற்ப ராகமென் னகையே (21)

பேச்சு

22 குழல்கரும் பமுதங் குயில்சீனி தேம்பால்
கிளியளி பூவையாழ் கிளருமுப் பழமுடன்

---

19 மணிப்பாலிகை, சுருள்மடல், கமுகு, பூசணி, பூச்செப்பு, சங்கு

20 படிமக் கமலம், படிமம், திங்கள், தடம், சேண்டி(?) பூத்தட்டு, தூதுளை, தொண்டை, செவ்வாம்பல், மாதுளை, இரந்தை, முருக்கு, பவளம், இந்திரகோபம், செங்கமலம், தளிர் நெல்லுறை, மால்கண், அமுதக்கடிகை, சொற்கதவம்

21 முத்து, மாதுளம், விரை முருந்து, கருநாவி, தளவு, பற்பராகம்

22 குழல், கரும்பு, அமுதம், குயில், சீனி, தேம்பால், கிளி, அளி, பூவை, யாழ், முப்பழம், கற்கண்டு, சர்க்கரை, தீங்கனி

கண்டுசர் கரைதீங் கனியொ டிவ்வளவும்
பெண்டிரு வாயுறு பேச்சென மொழியே (22)

கவுள்

23 சந்தனச் சாணையுஞ் சயிந்தவக் கலணையு
நந்துமூக் கிற்கண் ணுடியுங் கவுளே (23)

நாசி

24 எள்ளுங் குமிழு மிலவலர் காம்பு
மள்ளுஞ் சண்பகத் தரும்பு நாசிக்கே (24

விழி

25 வாள்கயல் சேல்வேல் வண்டுநஞ் சமுதமான்
வேள்கணை யமன்கரு விளைவலை குவளை
கஞ்சனம் பங்கயங் கடன்மழை மாலுகி
ரஞ்சன மூவிலி(?) னணையவாம் விழிக்கே (25)

காது

26 தேன்கவர் குண்டுகத் திரிகைபொன் னூசல்
மான்புகும் வாயில்பாய் வளையஞ் சுருத்தலை
நாரங்கி வள்ளைமின நவ்வு தீச்சால்(?) மயிர்
கூர்வினைக் கருவுயங் கொள்வர் காதினுக்கே (26)

---

23 சந்தனச் சாணை, சயிந்தவக் கலணை, நந்து மூக்கு, கண்ணுடி

24 எள், குமிழ், இலவம் பூங்காம்பு, சண்பகத்தரும்பு

25 வாள், கயல், சேல், வேல், வண்டு, நஞ்சு, அமுதம், மான், வேள்கணை, யமன், கருவிளை, வலை, குவளை, கஞ்சனம், பங்கயம், மழை, மால், உகிர், அஞ்சனம்

26 தேன் கவர் குண்டு, கத்திரிகை, பொன்னூசல், மான் புகும்வாயில், பாய்வளையம், சுருத்தலை, நாரங்கி, வள்ளை, நவ்வு

புருவம்

27 கடற்கரை வாளுறை கரிக்குரி மரைத்தா
ளடற்சிங் காடிநீ லாஞ்சனம் புருவே (27)

நுதல்

28 தினகரோ தயமுஞ் சிவநுதற் கண்ணும்
பனகரத் தினமும் படிகத் திலதமும்
பெரும்பிறை முறிவாள் சிலைபெரிய வாசிகை
கொக்கிற காத்தியி னரும்பென்பர் வாணுதலே (28)

கூந்தல்

29 கருமணற் சைவலங் கல்லார் மனதுவண்
டிருளார் பொதுமக ளிதையமஞ் சணிபூச்
சோலைகொன் றைக்காய் சூல்முகி லிந்திர
நீலமைச் சுழுகுபொன் னெய்த்தகூந் தலுக்கே (29)

மகளிர்

30 மயிலனங் கரும்புபொன் மான்மதித் தேனுயிர்
குயின்மின் கமலங் கொழுந்துபைந் தேறல்
மதன்குரு பீட மதன்கலைக் கியானங்
கதம்பகந் தெய்வங் கழுநீர் மோகினி

---

27 கடற்கரை, வாளுறை, மரைத்தாள்-தாமரை யிதழ், சிங்காடி-சுண்டுவில், நீலாஞ்சனம்-கறுப்பு

28 தினகரோதயம்-எழுஞாயிறு, சிவநுதற்கண், பனகரத்தினம், படிகம், பெரும்பிறை, முறி வாள், சிலை, வாசிகை-மாலை, கொக்கிறகு, அகத்தியரும்பு

29 கருமணல், சைவலம்-பாசி, கல்லார்மனது, வண்டு, இருள், பொதுமகள் இதயம், மஞ்சணிப்பூ, சோலை, கொன்றைக்காய், சூல்முகில், இந்திரநீலம், மை, சுழுகு, பொன்

30 மயில், அன்னம், கரும்பு, பொன், மான், மதி, தேன்,
ம், கொழுந்து, பைந்தேறல், மதன்,
ய்வம், கழுநீர் மோகினி, பூங்கொம்பு,

பூங்கொம் பமுதம் புருடர்முத் தார
மோங்குமுத் தார முலவிய சந்தன
மாசைக் களஞ்சிய மனங்கா பிஷேகம்
வீசுதென் றற்கொடி விருதுமா ரகுளிகை
வாடா விளக்க மாமலர் மாலை
ஓடாக் கிளிநிதி யுடன்றிருப் பாரதி
மேனகை யுருவசி மேவுதி லோத்தமை
யானவிந் திரைமற் றரம்பைநா கப்பெண்
கொல்லியம் பாவைநீர்க் கோதைசூர் மகளிரீ
தல்லவும் மகளிருக் கனைத்தன மொழியே (30)

அமுதம், புருடர் முத்தாரம், சந்தனம், ஆசைக்களஞ்சியம், அனங்காபிஷேகம், தென்றற்கொடி, விருதுமாரகுளிகை, வாடாவிளக்கம், மலர்மாலை, ஓடாக்கிளி, நிதி, திரு, பாரதி, மேனகை, உருவசி, திலோத்தமை, இந்திரை, அரம்பை, நாகப்பெண், கொல்லியம்பாவை, நீர்க்கோவை, சூர்மகளிர்,

உவமான சங்கிரகம்-2

விநாயக வணக்கம்

31 புவனமிசை மாதர் பொருந்தவய வங்கட்
குவமான சங்கிரக மோதக்—கவுளடிக்கட்
சிந்து மதவருவிச் செங்கட் புகர்வதனத்
தைந்துகரத் தான்காவ லாம் (1)

உள்ளங்கால் விரல்

32 வனச மலர்மாந் தளிர்முயலின் வயிறுசெயலே யனத்தூவி
சுனக ஞக்குச் செம்பஞ்சு துகடீ ரனிச்ச மிவை மடவார்
வினவுள் ளடிநேர் பெருங்காலின் விரல்க டமக்கு மஞ்சண்முளே
யனைய வென்பர் துவருமிணே யாமென் றுவந்து சொல் வாரே (2)

---

32 வனசமலர், மாந்தளிர், முயலின் வயிறு, செயலே, அன்னத்தூவி, சுனகன் நாக்கு, செம்பஞ்சு, அனிச்சம்; மஞ்சள் முளே

கால்விரல்நகம், புறங்கால், கரடு

33 காலின் விரல்சே ருகிர்படிகங் கண்பத் தாகக்கடைந்தமதி
சாலும் புறங்கால் கமடமும்புத் தகமுங் கமுகம்
பாளையுமாம்
பாலின் பாளை யுட்குரும்பை பந்து தராசு சிப்பியிவை
நாலுங் கரட்டுக் குவமையென நவில்வ ரியனூற்
கவிவலரே (3)

குதி, கணைக்கால்

34 பரவு சிறுதூ ரிகைப்பெட்டி பந்து சங்கு வனசமுகி
ழிரச நறுமாங் கனிகுதிங்கா லேய்க்கு முவமை பெறுந்
தூணி
விரவு தேன்பூ விரிபாளை வேணு காளம் வராலேந்து
முரவுக் கணைக்கா லுக்கிணங்கு முவமை யாமென்
றுரைப்பாரே (4)

முழங்கால், தொடை

35 அலவன் பசுமுக் குற்றதிற லாலான் பணிகே டகத்தின்
குமிழ்
சொலுநன் முழந்தாட் குவமையெனச் சொலுவர்
தொடைக்கா னைத்துதிக்கை
சலமி லினு விளங்கதலித் தண்டா மல்குற் றடநீந்தக்
குலவு தெப்பந் தூணெனவுங் குறிப்ப ருவமை நெறி
யெனவே (5)

---

33 படிகம், மதிக்கீற்று; கமடம்-ஆமை, புத்தகம், கமுகம்-பாளை; குரும்பை, பந்து, தராசு, சிப்பி

34 தூரிகைப்பெட்டி, பந்து, சங்கு, வனசமுகிழ்? மாங்கனி; தூணி-அம்புக்கூடு, பாளை, வேணு-மூங்கில், காளம்-இசைக்கருவி; வரால்-மீன்.

35 அலவன்-நண்டு, பசுமூக்கு, பணி-பாம்புப்படத்தின் மேற்பக்கம், கேடகத்தின் குமிழ்; ஆனைத்துதிக்கை, இளங்கதலி, அல்குல்தடம் நீந்தக் குலவு தெப்பம், தூண்

அல்குல், பெண்குறி

36 பொற்றட் டனங்க னரமனேவேள் பொக்கிசங் காக்கணம்
பூப்பைந்
தெற்றுந் தேன்கூ டரவபடஞ் செந்தாமரைப்பூ மதுக்
குழலாம்
பற்றும் வாழைப் பூமலிபொற் பதக்கங் குதிரைச் செவி
தேர்த்தட்
டுற்ற வமுத சர்க்கரைகூ ருடும்பின் வாய்நற் றேன்
கிணறு (6)
37 அடருஞ் சத்தி பீடமத னுலவட்டங் குளமடைபாற்
கடறா விளக்குச் சங்கநிதி கவினு ரிளவெற் றிலைவிண்ணிற்
படரு மரசி னிலைபட்டம் பகரு மல்கு றனக்கிசையத்
தொடரு முவமை பெண்குறிக்குச் சொல்லத்தகு மான்
குளம்பென்றே (7)

இடை, வயிற்றுமடிப்பு, வயிறு

38 கொடிநூல் துரும்பு தேய்ந்தபிறைக் கொழுந்து சிங்க
மதனுருவந்
துடிவிண் மின்கைப் பிடிகுலிசந் துலங்கு மரவு மிடைக்
கொப்பாம்

---

36 பொற்றட்டு, அனங்கன் அரண்மனே, வேள்பொக்கிசம், காக்கணம் பூ-கொடியின்பூ, பைந்தெற்று,தேன்கூடு, அரவபடம், செந்தாமரைப்பூ, மதுக்குழல், ஆம்பற்றும் வாழைப்பூ-நீர் நிறைந்த வாழைப்பூ, பொற்பதக்கம், குதிரைச்செவி, தேர்த்தட்டு, அமுதம், சர்க்கரை, உடும்பின்வாய், தேன்கிணறு

37 சத்திபீடம், மதன் ஆலவட்டம்—விசிறி, குளமடை, பாற்கடல், விளக்கு, சங்கநிதி, இளவெற்றிலை, அரசு இலை, பட்டம், மான்குளம்பு

38 கொடி, நூல், துரும்பு, தேய்ந்தபிறைக் கொழுந்து, சிங்கம்- சிங்கத்தின் இடை, மதனுருவம்-எரிந்த மதனின் உரு

படிநீர்த் திரைபோ லவுமடிப்புப் பயிலும் வயிற்றுக்
காலிலையுங்
கடிசேம் பிலையு மதிப்பிளவுங் கதலிக் குருத்து
மிணையாமே (8)

உந்தி, வயிற்று உரோமத்தொழுங்கு

39 வட்டச் சோகி மல்லிகைப்பூ வருநீர்ச் சுழிநந் தியாவட்ட
மொட்டென் றுவமை யுந்திக்கு மொழிவர் சலாகை
வார்க்கயிறு
துட்ட மதன ஞெழுக்கந் தும்பித் துதிக்கை யெறும்
பொழுக்கம்
விட்ட கரிய மணிக்கோவை வேழத் திழியு மததாரை (9)

40 விரும்பா லிலையி னடுநரம்பு விண்டு கிடத்த லிரதவடங்
கரும்பா மிளநீர்க் காம்புநறுங் களபத் தின்றண் டுளித்
தாரை
யரும்பார் வனசப் பூம்பசுந்தா ளவிர்வான் ருரை
யென்றிசைய
வரும்பே ருவமை பெறுமடிப்பின் வயிற்று ரோமத்
தொழுங்கினுக்கே (10)

தனம்

41 வல்லுச் சக்கிர வாகமதன் மகுட மெலுமிச் சங்கனிபூண்
வில்வக் கனிமாங் கனிதேங்காய் விளவின் கனிகோ
புரத்தூவி

வம், துடி, விண், மின், கைப்பிடி, குலிசம், அரவு; நீர்த்திரை; ஆலிலை, சேம்பிலை, மதிப்பிளவு, கதலிக் குருத்து

39 வட்டச் சோகி-பலகறை, மல்லிகைப்பூ, நீர்ச்சுழி, நந்தியாவட்டம், மொட்டு; சலாகை-வார்க்கயிறு, தும்பி, துதிக்கை, எறும்பொழுக்கம், கரியமணிக்கோவை-நீலமணிகளின்கோவை, வேழத்து இழியும் மததாரை.

40 ஆலிலையின் நடுநரம்பு, விண்டுகிடத்தல்-திருமாலின் படுக்கை. இரதவடம், கரும்பு, இளநீர்க்காம்பு, களபத்தின் தண் துளித்தாரை, அரும்பு, வனசப்பூ, பசுந்தாள், வான்தாரை

சொல்வெற் பிளநீர் கதலிப்பூச் சொர்னத் தாளஞ்
சிவலிங்கந்
தெல்லுக் கரகங் கோங்கரும்பு சிமிழ்பம் பரம்பொற்
குடங்கிண்ணம் (11)

42 செண்டு குமிழ்வார் கூடாரஞ் சேவின் சிமிழ்பொற் கரண்
டகமென்
புண்டரீக முகிழ்பந்து புன்னைக் காய்மா துளங்கனிமேற்
கொண்ட மொக்குள் பிடிசெம்பு கொட்டைப் பாக்குப்
பருதிமதி
மிண்டு மிபமத் தகமருப்பு மெழுகி னுருண்டை பசும்
பொற்றேர் (12)

43 படர்ந்த செப்பு மாவிலிங்கம் பழமா றேழு மிணைந்திருமாந்
தடர்ந்து விம்மிச் சுணங்கரும்பி யண்ணுந் திளகிப்
பணைத்தெழுந்து
தொடர்ந்து களப மொழுகநறுந் தொய்யி லிலங்க
வெண்டரள
வடங்கொள் புளக முலைக்கிசைய வழுத்து முவமைச்
சிறப்பாமே (13)

---

41 வல்-சூதாடுகருவி, சக்கிரவாகம்-பறவை, மதன் மகுடம், எலுமிச்சங்கனி, பூண், வில்வக்கனி, மாங்கனி, தேங்காய், விளவின்கனி, கோபுரத்தூவி, வெற்பு, இளநீர், கதலி சொர்னத்தாளம், சிவலிங்கம், கரகம், கோங்குஅரும்பு, சிமிழ் பம்பரம், பொற்குடம், கிண்ணம்.

42 செண்டு, குமிழ், கூடாரம், சேவின்சிமிழ், பொற் கரண்டகம்-பூக்குடலை, மென்புண்டரீகம், முகிழ், பந்து புன்னைக்காய், மாதுளங்கனியின் மேல் உள்ளமொக்குள், பிடி செம்பு, கொட்டைப்பாக்கு, பருதி, மதி, மத்தகமருப்பு, மெழுகின் உருண்டை, பொற்றேர்.

43 செப்பு, மாவிலிங்கம், பழம்,களபம்-சுண்ணச்சாந்து.

விரல், நகம்

44 அலரிக் காய்முத் திரைக்கோல்பொன் னுழி துலங்கும் பயற்றங்காய்
குலவப் படுமாந் தளிர்பவளக் கொம்பு கெளிறுகிட்டிக்கோ
னிலவச் சுழற்றுந் திறவுகோல் நேரு மிருகை விரற்குவமை
கலவப் பெறுமவ் விரலுகிர்க்குக் கருதுங் கிளிமூக் கொப்பாமே (14)

அங்கை, தோள்

45 தளஞ்சேர் செந்தா மரைகாந்த டயங்கு முச்சி திலதமென
வளஞ்சே ரங்கை பெறுமுவமை மானு முன்கை யாழ்க் கோடு
விளங்கு மெழிற்பூ ரணகும்ப மிசையே தரித்த மாலிகைவேய்
கிளர்ந்த மலர்ப்பஞ் சணைமூன்றுங் கிளரு மென்றோட் கிணையாமே (15)

கழுத்து, முகம், வெயர்வு

46 சங்கு செம்பு பாலிகைபூ சனிப்பூச் சூல்கொ ளிளங்கமுகு
மங்கலஞ்சேர் சுருளேந்து மடலுங் கழுத்துக் குவமைபெறுந்

---

44 அலரிக்காய், முத்திரைக்கோல், பயற்றங்காய், மாந்தளிர், பவளக்கொம்பு, கெளிறு, கிட்டிக்கோல்—இறுக்குங் கோல், திறவுகோல்; கிளிமூக்கு

45 செந்தாமரை, காந்தள், முச்சி-சிறுசுளகு, திலதம், யாழ்க்கோடு, பூரணகும்பமிசையேதரித்தமாலிகை (மாலை), வேய், மலர்ப்பஞ்சணை.

46 சங்கு, செம்பு, பாலிகை, பூசனிப்பூ, சூல்கொள் இளங் கமுகு, சுருளேந்துமடல்; திங்கள், படிமக்கலம்-கண்ணுடி, செண்டு, பூத்தட்டு; முத்தம்.

திங்கள் படிமக் கலங்கமலஞ் செண்டு பூத்தட் டிவைதரணி
யெங்கும் புகழுந் திருமுகத்துக் கிசையு முத்தம்
வெயர்வாமே (16)

இதழ், வாய்

47 கொண்ட பவள முருக்கிந்த்ர கோப மிலவு செம்பரத்தந்
தொண்டை வீழி யமுத துண்டஞ் சொற்க பாட மாதுளம்பூ
வண்டு கவியுஞ் செழுங்குமுத மலர்தூ துளேசெங்
கமலமொப்புக்
கண்டு மொழிந்தா ரீரிதழ்க்குங் கனிவா யினுக்கு
மிணையாமே (17)

பல், நகை

48 முத்துத் தளவு புன்கரும்பு முருந்து மாது ளங்கனியின்
வித்துப் பதும ராகமுணு விரும்பு மெயிறு தகும்பரிவி
னத்துத் தரள நகைக்குவமை நகுவெண் ணிலவா
மெயிறுசற்றே
யொத்துச் சிவந்தாற் பவளமுந்தா ளுெவ்வா தென்று
முரைப்பாரே (18)

சொல்

49 வாகி னுறுதீம் பால்செந்தேன் வண்ணப் பசும்பூங்
கிளியமுதம்
பாகு கரும்பு கற்கண்டொப் பாகும் யாழ்செங் கனிசீனி

---

47 பவளம், முருக்கு, இந்திரகோபம், இலவம், செம்பரத்தம், தொண்டை, வீழி, அமுததுண்டம், சொற்கபாடம், மாதுளம்பூ, வண்டு, கவி, செழுங்குமுதம், தூதுளே, செங்கமலம்.

48 முத்து, தளவு-முல்லேயரும்பு, புன்கு-புனமுருங்கை, அரும்பு, முருந்து-மயிலின் இறகடி, மாதுளங்கனியின் வித்து, பதுமராகம்;தரளம், வெண்ணிலவு, பவளம்.

யேகும் பூவை வரிச்சிறைவண் டிரங்கு மிசைகோ கிலங்
குழலென்
ருகு மிவையீ ரேழுமினித் தருளுஞ் சொல்லுக்
கிணையாமே (19)

கபோலம், நாசி

50 சந்தச் சாணை பரிக்கலனை சாரு மூக்கின் கண்ணடி
யந்தக் கவுளி னுவமை சொல்ல லாமெட் பூவுங்
குமிழரும்பு
முந்தக் கமழ்செண் பகவரும்பு முருகா ரிலவம்
பூங்காம்பும்
பந்தக் கவிஞ ரெல்லோரும் பகர்வார் நாசிக்
கிணையெனவே (20)

கண்

51 வேல்வா ளமுதம் கருங்குவளை வேலை மாவின்
வடுவகிர்மான்
கோல்பங் கயமஞ் சமர்குடங்கை கூற்று விடங்காக்
கணம்வண்டு
சால்பி னுறுகஞ் சனங்கயல்சேல் சகோரம் வழிபோய்க்
குழையடர்ந்து
மால்வி தாதாச் சிவனுருவின் வயங்கும் விழிக்கொப்
பிவையாமே (21)

---

49 வாகு-அழகு, நறுதீம்பால், செந்தேன், வண்ணப் பசும்பூ, கிளி, அமுதம், பாகு, கற்கண்டு, யாழ், செங்கனி, சீனி பூவை, வரிச்சிறைவண்டிரங்குமிசை, கோகிலம், குழல்.

50 சாணை, பரிக்கலனை-குதிரையின்சேணம், கண்ணடி, கவுள்-கன்னம்; எட்பூ, குமிழ்அரும்பு, சண்பக அரும்பு, முருகு, இலவம்பூ, காம்பு.

51 வேல், வாள், அமுதம், கருங்குவளை, வேலை-கடல், மாவின்வடு, மான், கோல்-பாணம்,பங்கயம், குடங்கை,கூற்று, விடம், காக்கணம், வண்டு, கஞ்சனம்-கண்ணடி, கயல், சேல், சகோரம்.

கண்ணினியல்பு

52 நெஞ்சு கறுத்த பேதைக்கு நிகழ்த்தும் விழிசெங் குமுத
மொப்பாம்
வஞ்ச முறுகோ ரமுமிகுந்த மயலும் பூட்டு மையலினுற்
றுஞ்சு மதற்பி னெடுகருமஞ் சூழ்ந்துகூர்மை
நனியுடைத்தாய்
விஞ்சை மதன கமவழியை விளக்குங் கடைக்கண்
வேலாமே (22)

காது, புருவம்

53 நகுபூ வள்ளை பொன்னூச னவில்கத் திரிகை சுராத்
தலைமான்
புகும்வாய் கதவிற் பூட்டுதொடர் புகழுங்காதுக்
குவமையதாத்
தகுமே நீலாஞ் சனஞ்சலசத் தாளி னெடுசிங் காடிவில்லுஞ்
செகுவா ளுறையுங் கடற்கரையுஞ் செப்பும் புருவ
மொப்பாமே (23)

நுதல், திலகம்

54 அகத்தி யரும்பு வாசிகையு மணுகக் குனிக்கும்
பூஞ்சிலையும்
பகுத்த பிறையுங் கொக்கிற்கும் பகருநுதலுக் கிணையாகும்
வகுத்த நுதலி லிடுந்திலக மானுந் தினக ரோதயமுஞ்
சகத்துக் கிறைவர் நுதற்கண்ணுந் தயங்கு நாக
ரத்தினமே (24)

---

52 செங்குமுதம்.

53 வள்ளை-வள்ளைக்கொடி, பொன்னூசல்-ஊஞ்சல்வடம், கத்திரிகை, சுராத்தலை, மான் புகும்வாய், கதவு, விற்பூட்டு, நீலாஞ்சனம், சலசத்தாள்-தாமரையிதழ். சிங்காடி, வில், வாளுறை, கடற்கரை.

54 அகத்தியரும்பு, வாசிகை. பூஞ்சிலை, பகுத்தபிறை, கொக்கிறகு; திலகம், தினகரோதயம், இறைவர்நுதற்கண் நாகரத்தினம்.

கூந்தல்

55 கொன்றைக் கனிகல் லார்மனமுங் கூந்தற் கமுகும்
பொதுமாது
தன்ற னிதையஞ் சூன்மேகஞ் சவரி கருமை யடர்கங்குன்
மன்றல் கமழு மஞ்சனிப்பூ வயங்குஞ் சிறைவண்
டினஞ்சோலை
துன்றல் வரும்பைம் புனல் கொழிக்குந் தூய வறலிந்
திரநீலம் (25)

56 இருள்சை வலமா மூவைந்து மிணங்கு மிளைஞ ராருயிரு
முருகின் பலமென் னறும்பூவு மொக்கச் சொருகிக்
கடைசுழன்று
வருமைச் சுழிவு போலுநெய்த்து வண்டுசூழ்ந்து குழை
வார்ந்து
தருதேன் றுளிப்ப வழிந்தொழுகுந் தகரக் குழலுக்
கிணையாமே (26)

பின்னிவிட்ட கூந்தல்

57 கன்னிக் கமுகி னரும்பாளை கரிய பிடியா னைத்துதிக்கை
யென்னக்கூறு மதிப்பகையு மேய்க்கும் பிச்சி
மருக்கொழுந்து

---

55 கொன்றைக்கனி, கல்லார்மனம், கூந்தற்கமுகு: பொதுமாது இதயம், சூல்மேகம், சவரி, கருமையடர்கங்குல், அஞ்சனிப்பூ-காயா, சிறைவண்டினம், சோலை, பைம்புனல், அறல்-கருமணல், இந்திரநீலம்.

56 இருள், சைவலம்-பாசிக்கொத்து, தகரம்-மயிர்ச் சாந்து.

57 கமுகின் அரும்பாளை, கரியபிடியானைத்துதிக்கை, மதிப்பகை-அரவு, பிச்சி-சாதிமல்லிகை.

புன்னைப் பூச்செண் பகமுல்லைப் பூச்செவ் வந்தி
பொலிந்திலங்கப்
பின்னுக் கழகாய் வகுப்பெடுத்துப் பின்னி விடும்பூங்
குழற்கிணையே (27)

மதனிரத முதலியன

58 இரதம் வசந்த மதயானை யிரவாம் பூவை பசுங்கிள்ளை
புரவி படைமங் கையர்வாசம் பொலியு மிணர்மென்
பூஞ்சோலை
பரவு படைவீ டாமுரசு பரந்த கடலாங் கொடிமகர
முரவா ரன்றில் காளமதா முயர்வெண் குடையிந்
தனங்கனுக்கே (28)

59 சொன்ன குடைக்கான் மதிகிரணஞ் சுரிமென் குழலார்
முகசயன
மூன்னும் வதுவை யவன்பரிசை யோங்கித் தளிர்க்கும்
வெருகிலையாஞ்
சின்ன மிசைபூங் குயில் விளம்புந் தேரி னுருள்சந்
தனச்சாணை
மன்னு நறுமாந் தளிர்பட்டா மகிழ்கைச் சரமா துளம்
பூவே (29)

60 வெல்லு மதவேள் மார்பினிலே விளங்கு மாலை யிலஞ்சி
மஞ்சள்
புல்லுங் கமுகி னரும்பாளை பொற்ப விரட்டுஞ் சாமரை
யாஞ்

---

58 வசந்தம்-தென்றல்

59 பரிசை-கேடகம், வெருகிலை-வெருகென்னும் பூண்டினிலை

60 ஓலைப்பூ-தாழம்பூ.

செல்லு மவன்கா ளாஞ்சிமலர் செண்பக முமல் லிகைப்
பூவு
மொல்லும் வேனி லவன்றிருநா ளுடைவா ளோலைப்
பூவாமே (30)

61 பதிக்கு மதனன் பரிக்கலனே பகரு நறும்பூ மல்லிகையாங்
கதிக்கு மிலஞ்சி கடிவாளங் கன்னச் சல்லி புன்னையம்பூ
மதிக்கு மவன்மெய் யிடுங்கவச மலிந்த விரைதோ ழன்
வசந்தன்
விதிக்குப் பினவன் றேர்ப்பாகன் விரும்பு மகிண
னெனலாமே (31)

62 கதிர்ப்பூம் பச்சைத் தண்டும்வெறி கமழும் பசிய
மாந்தண்டு
மதுக்கொண் டலர வழிந்தொழுகும் வாச முறுமல்
லிகைத்தண்டுந்
துதிக்குங் கருப்பந் தண்டுமளி சூழுங் கமலப் பூந்தண்டும்
விதுத்தண் குடையா னெடுத்தபஞ்ச வில்லென் றுணர்ந்
தோர் சொல்வாரே (32)

63 பிச்சிக் கொடியு மடல்விளங்கும் பிரசநறுந்தா மரைநூலு
மெச்சப் பொலிவின் மணம் வீசும் வெட்டிவேருங் கார்
வண்டும்
பச்சைப் பசுமாந் தளிருமெனப் பகர்ந்த தனுக்க ணந்
தினுக்கு
மச்சக் கொடியோன் பூட்டியநாண் வகையீ தென்பர்
தகவுடையோர் (33)

---

61 இலஞ்சி-மகிழம்பூ, கன்னச் சல்லி- காதிடு தூக்கங்கள்

62 பச்சைத்தண்டு, மாந்தண்டு, மல்லிகைத் தண்டு, கருப் பந்தண்டு, பூந்தண்டு,-பஞ்சவில்.

63 நாண்வகை: பிச்சிக்கொடி, தாமரைநூல், வெட்டிவேர் கார்வண்டு, பசுமாந்தளிர்.

64 சொற்ரு நறுமுல்லைப்பூவுந் தூவ சோகின் பூவுமிகக்
கற்ருேர் புகழு மாம்பூவுங் கடிசேர் தண்டா மரைப்பூவும்
பொற்பா யலர்நீ லப்பூவும் போரின் மதவேள் செங்கை
யினுற்
பற்ருய்த் தொடுத்து நின்றெய்யும் பஞ்ச பாணத்தடை
விதுவே (34)

65 சிரசின் முல்லை நேத்திரத்திற் றிகழ சோகு தனமீது
விரவு சூத மார்பினிடை விளங்கு முளரி வயங்குபொறி
யரவ படத்தி னறுநீல மனுகச் சமரிற் குறிநோக்கி
யுரவே ஊந்து கணையெய்தற் குற்ற தான
மைந்தாமே (35)

66 ஏற்ற முல்லை கிடைகாட்டு மெதிர்ந்த சோகு சென்றுபல
தோற்றங் காட்டி யுணவகற்றுஞ் சூத மடலிற் பசலைதருந்
தேற்ற முறுசெந் தாமரைப்பூச் சிந்தை யார நினைவிக்குங்
கூற்ற மனைய நறுநீலங் கொலும்வே ளம்பின் குண
மிதுவே (36)

67 மனதின் மோகஞ் செனித்தவுடன் மதனும் விரவி மனோ
பவமாய்த்
தனது சொரூப ரூபமெனுந் தன்மை தோன்ற மெய்
பொலிந்து
சினவி யெழுந்து சன்னதமாய்ச் சிலையைக் குனித்து
நாண்பூட்டி
யினமென் னறும்பூங் கணைகடொடுத் தெய்து பூசல்
செய்வானே (37)

---

64 பாணம்: நறுமுல்லைப்பூ, அசோகின்பூ, மாம்பூ, தாமரைப்பூ, நீலப்பூ.

65 சமரிற்குறி: சிரசு-முல்லை; நேத்திரம்-அசோகு; தனம்-சூதம்(மா) மார்பு-முளரி (தாமரை) அரவபடம்-நீலம்.

66 முல்லை கிடை காட்டும், அசோகு பல தோற்றம் காட்டி உணவகற்றும், சூதம் பசலைதரும், செந்தாமரை நினைவுதரும்.

உவமான சங்கிரகம்-3

காப்பு

நேரிசை வெண்பா

வேதத் தமிழ்மாறன் வெற்பனையார் கேசாதி
பாதத் துவமானப் பண்பெல்லாந்—தாதின்
முருகூர் மலர்க்குழலாய் மூதுரையாற் சொல்வன்
குருகூ ரனைத்தொழுது கொண்டு

கூந்தல், நெற்றி

68 கொண்டலுங்கூந் தற்பனையுங் கொன்றைக்காயுமிருளுந்
தண்டலையுங் கார்மணலுஞ் சைவலமும்—வண்டினமுந்
தண்குழலை யொப்பாந் தனிவா ணுதற்குநிகர்
வெண்பிறையுஞ் செஞ்சிலையு மே (1)

---

68 கொண்டல், கூந்தற்பனை, கொன்றைக்காய், இருள், தண்டலை, கார், மணல், சைவலம், வண்டினம், வெண்பிறை, செஞ்சிலை.

புருவம், கண்

69 மேவிற் புருவம் விழிக்குவண்டுந் தாமரையுங்
காவியுங்கூற் றம்புங் கருவிளையு—மாவடுவும்
வேலுங் கடலும் விடமுமமு தும்வாளுஞ்
சேலும் பிணையுமிணை செப்பு (2)

முகம், காது, கபோலம், மூக்கு

70 செப்பு முகங்கமலந் திங்கள்கா திற்குவள்ளை
யொப்பரிய கத்தரிகை யூசலா—மப்புநிலை
கண்ணடி சாணை கபோலங் குமிழ்சாதி
யெண்ணு சிகைக்குவமை யே (3)

இதழ், வாய், பல், கழுத்து

71 ஏய்கிடைகோ பந்துப் பிலவு முருக்கிதழாம்
வாய்குமுதம் வீழிதொண்டை வாரிசமாம்—தோய்
[கழுமுண்
முத்துத் தளவ முருந்தெயிருங் கந்தரத்தை
நத்துங் கமுகெனவே நாட்டு (4)

மொழி

72 நாட்டுங் கதலி நடுக்கரும்பு மாவருக்கை
காட்டுங் குயில்கிள்ளை கற்கண்டு—வேட்டருந்துஞ்

---

69 வண்டு, தாமரை, காவி, கூற்று, அம்பு, கருவிளை, மாவடு, வேல், கடல், விடம். அமுதம், வாள், சேல், பிணை.

70 கமலம், திங்கள், வள்ளை, கத்திரிகை, ஊசல், கண்ணடி, சாணை, கபோலம், குமிழ், எள்.

71 கிடை-நெட்டி, கோபம், இலவு, முருக்கு; குமுதம், வீழி-ஒருவகைச் செடி, தொண்டை, வாரிசம்-தாமரை; முத்து, தளவம், முருந்து; கந்தரம்-கழுத்து, நத்து-கூகைவகை, கமுகு.

சீனி சருக்கரைசெந் தேனமுதம் பால்குழல்யா
ழானபதி னான்குமொழிக் காம் (5)

தோள், முன்கை, அங்கை, கைவிரல், கைநகம்

73 காம்புகழை தோளிணைமுன் கைமகர யாழாகுந்
தேம்பதும மாந்தளிர்பூஞ் செங்காந்தள்—யாம்புகல்வோ
மங்கை விரல்கெளிறு மவ்விரலின் கூருகிர்க்குப்
பைங்கிளிமூக் கென்றுவமிப் பாம் (6)

கொங்கை, கொங்கைக்கண், உதரம், உந்தி. மடிப்பு

74 பாங்கரும்பு சூதுகிண்ணம் பைங்குரும்பை செப்புமுடி
கோங்கரும்பு தாளங் குமிழிசிமிழ்—பூங்கமலம்
பம்பரம் வெற்பிளநீர் பந்துசகோ ரங்கலசங்
கும்பமருப்பி யானை குடம் (7)

75 குடமுதனு லந்துமணிக் கொங்கைகண் ணீலம்
வடமுதர முந்தி மகிழம்பூ—படர்சுழியா
மேறும் படியு மெறிநீர்த் தடந்திரையுங்
கூறும் படிமடிப்புக் கொள் (8)

---

72 கதலி, நடுக்கரும்பு, மா, வருக்கை-பலா, குயில், கிள்ளை, கற்கண்டு, சீனி, சருக்கரை, செந்தேன், அமுதம்,பால், குழல், யாழ்.

73 காம்பு, கழை, மகரயாழ், பதுமம், மாந்தளிர், செங் காந்தள், கெளிறு-மீன்; கிளிமூக்கு

74 கரும்பு, சூது, கிண்ணம், குரும்பை, செப்பு, கோங் கரும்பு, தாளம், குமிழ், சிமிழ், கமலம், பம்பரம், வெற்பு, இள நீர், பந்து, சகோரம், கலசம், கும்பம், யானை, மருப்பு, குடம்.

75 கொங்கைக் கண்-நீலமணி; வடம், மகிழம்பூ, நீர்த் திரை.

உரோமக் கொடி

76 கொண்ட வுரோமக் கொடிக்கே யெறும்பொழுக்கும்
வண்டொழுக்குங் காஞ்சி மணிச்சுடருங்—கண்டகர்காற்
சங்கிலியும் வேழத் தறியுஞ் சலாகையுநீள்
பங்கயத்தி னுளமும்வைப் பார் (9)

இடை

77 பாரிலிடைக் கரவும் பைங்கொடியும் பூங்கொம்பு
மார னுடம்பும் வகிரிழையு—நேர்கைப்
பிடியளவுந் தேய்ந்த பிறைக்கொழுந்து மின்னுந்
துடியளவுங் கோளரியுஞ் சொல் (10)

அல்குல், பெண்குறி

78 சொல்லிய வல்குல் சுனையோ டரசிலையுஞ்
சில்லியும் பொற்கொடிஞ்சித் தேர்த்தட்டும்—வல்லரவு
மண்குறிக்குஞ் சிற்ருல வட்டமும் பட்டமுமாம்
பெண்கு றிக்கு மான்குளம்பைப் பேணு (11)

தொடை, முழங்கால், கணைக்கால்

79 பேணுங் கதலி பிடிக்களிற்றின் கைகுறங்காம்
பூணுமுழந் தாளலவன் போலுமே—வேணுவுடன்
சோகமுறு மம்புபெய் தூணியும் வராற்கன்றுங்
காகளமும் போன்றகணைக் கால் (12)

---

76 எறும்பொழுக்கு, வண்டொழுக்கு, மணிச்சுடர், காற் சங்கிலி, வேழத்தறி, சலாகை, பங்கயத்தின் நாளம்.

77 அரவு, பைங்கொடி, பூங்கொம்பு, மாரன் உடம்பு, இழை, கைப்பிடி, தேய்ந்தபிறைக் கொழுந்து, மின், துடி கோளரி.

78 சுனை, அரசிலை, சில்லி, பொற்கொடிஞ்சி, தேர்த்தட்டு, அரவு, சிற்ருலவட்டம், பட்டம், மான்குளம்பு.

79 கதலி, பிடிக்களிற்றின்கை; அலவன்; வேணு, அம்பு பெய்தூணி, வரால், காகளம்-இசைக் கருவி.

பரடு, குதி, புறவடி, கால்விரல்

80 காலிற் பரடிரண்டுங் கைத்தரா சொக்குமிரு
காலிற் குதிமதிக்குங் கந்துகமா—நூலெழுது
புத்தக மாமை புறவடியொப்பாந் திரண்ட
வித்துருமம் போலும் விரல் (13)

கால்நகம், கால்

81 விரற்பவளங் கூருகிர்க்கு வெண்பிறையு முத்து
நிரைக்கழுநீர்ச் செவ்விதழு நேராம்—பரப்பியல்கா
லஞ்சநறுந் தூவி யனிச்சமசோ கங்கமலம்
பஞ்சிலவு மாந்தளிரொப் பாம். (14)

நடை, சாயல், மேனி, தேமல்

82 பாயற் பிடிவேழம் பைந்தூவி யன்னநடை
சாயற்கு மின்னமுதந் தான்மயிலாஞ்—சேயிழையாய்
மாந்தளிர்பூஞ் சண்பகப்பூ மாமேனி யம்மேனி
பூந்திதலே வேங்கைபசும் பொன். (15)

---

80 கைத்தராசு; கந்துகம், புத்தகம், ஆமை, திரண்ட வித்துருமம்-பவளம்.

81 பவளம்; வெண்பிறை, முத்து; கழுநீர்ச் செவ்விதழ், அஞ்சநறுந்தூவி, அனிச்சம், அசோகம், கமலம், பஞ்சு, இலவு, மாந்தளிர்.

82 பிடிவேழம், பைந்தூவி அன்னம், இன்னமுதம், மயில், மாந்தளிர், சண்பகப்பூ, வேங்கை, பசும்பொன்.

இரத்தினச் சுருக்கம்

பிரிவாற்ருமைக்குரிய குறிகள்

கட்டளைக் கலித்துறை

1 சோருந் துகிலும் வளைகலை நாணுந் துணிந்துமட
லூருந் தொழிலு மொளிகூர் பசலையு மோடரிக்கண்
ணீருங் கிழியும் பருமணற் கூடலு நின்றரற்று
மூருந் தனியு மறைபோன நெஞ்சமு முண்டென்பரே

2 உண்ணுது வள்ளத் தமுதமு மூசலுங் கந்துகமு
நண்ணு வியல்பு நடுக்கமுஞ் சோபமு நாள்பலவு
மண்ணுத மேனியும் வாரா வுறக்கமு மாசுடையும்
புண்ணுன நெஞ்சும் புகைதா முயிர்ப்பும் பொரி முத்துமே

பகை

3 முத்துங் களபமுந் தண்பனிநீரு முயங்குமலர்த்
தொத்துங் குளிரியுந் தூயமலர்ப் பாயலுஞ் சூழ்ந்துபுறங்

1, 2 பிரிவாற்ருமைக்குரிய குறிகளைப் பிரபந்தத்திரட்டுப் பாடல்களிலும் காண்க: பாடல் 190, 191.

கத்துங் கடலுங் கதலியு மாலியுங் கங்குலுமிப்
பத்தும் பெரும்பகை யாய்விட்ட வாவொரு பைந்
(தொடிக்கே)

நீக்கல்

நேரிசை வெண்பா

4 தொடியும் பலகலனுந் தூய்கச்சு முத்துங்
சுடிகமழ்தா ரும்புனையாள் கால—விடமனைய
சேல்விழிக்கு மையுந் திலகநுதற்குங் குறியாள்
சாலமுடி யாளளகந் தான்

5 தானே கழங்கமனை தண்சுனை நீராடாள்
கானே ரிசைபயிலாள் கைக்கிளியு—மானினமும்
பூவையை யும்போற்றுள் பொருந்தவே பாங்கியருக்
கேவல் புரியாள்களிப்ப தென்று

துயர்க்கேது

6 தென்றற்கும் வீணைக்குஞ் சேமணிக்குங் கோகிலத்துக்
கன்றிற் கமைக்காழிக் கம்புலிக்கு—நின்றரற்று
மன்னைக்கு மாரற் கயர்ந்தாளென் றன்னமே
யென்னைக்கு மாரற் கியம்பு

தூது

7 இயம்புகின்ற காலத் தெகினமயில் கிள்ளை
பயம்பெறுமே கம்பூவை பாங்கி—நயந்தகுயில்
பேதைநெஞ்சந் தென்றல் பிரமரமீ ரைந்துமே
தூதுரைத்து வாங்குந் தொடை

---

3 ஒப்பு நோக்குக: பிர. திரட்டு, பாடல் 192.

4. 5 ,, ,, பாடல் 193

6 ,, ,, பாடல் 196

7 எகினம்-அன்னம், பூவை-நாகணவாய்ப்புள் பிரமரம்-வண்டு.

மன்மதனுக்குரிய மாலை முதலியன

8 தொடையிலஞ்சி மஞ்சளிளஞ் சோலை படைவீடு
படைமங் கையர்கமுகம் பாளை—யிடுகவரி
காளாஞ்சி மல்லிகையாங் காரிகையீர் மாரனுக்கு
வாளாமோ லைப்பூவு மாம்

9 ஆலைக் கரும்புசிலை யைங்கணைபூ நாண்சுரும்பு
மாலைக்கிளி புரவி மாருதந்தேர்—வேலை
கடிமுரசங் கங்குல் களிறுகுயில் காளங்
கொடிமகரந் திங்கள் குடை

மன்மதன் கணை

10 குடைகவித்தான் கஞ்சங் கோதறு சூதப்பூ
கடியுமசோ கந்தளவு காவி—படையெடுத்து
வாங்காச் சமர்விளைக்கு மாரனுக்கெப் போதுமங்கை
நீங்காக் கணையா நினை

கணைச்செயல்

11 நினைக்கு மரவிந்த நீள்பசலை மாம்பூ
வனைத்துணவு நீக்கு மசோகு—வனத்திலுறு
முல்லை கிடைகாட்டு மாதே முழுநீலங்
கொல்லுமத னம்பின் குணம்

கண்ணினியல்பு

12 குணமுங் கதமுங் கொடுந்தொழிலு மன்பின்
கணமுங் குடியிருப்பாக் காட்டு—மிணையாய்த்

---

8 இலஞ்சி-மகிழ மரம்.

9 காளம்-இசைக்கருவி.

10 கஞ்சம்-தாமரை, சூதம்-பவள மல்லிகை, மாம்பூ; தளவு-முல்லை காவி-கருங்குவளை.

11 அரவிந்தம்-தாமரை.

துடிக்குஞ் சுழலுஞ் சுருட்டு மன்பருள்ளங்
குடிக்குமநு ராகவஞ்சங் கூர்ந்து

13 வஞ்சங் கொலைபோர் மதனுகமம் விரகந்
துஞ்சுங் களவு சுகங்கலக—மஞ்சனமென்
செம்மைவெளுப் புக்கறுப்புச் செவ்வரிநீ லம்பெருமை
வெம்மைமதர்ப் புக்கடைக்கண் வேல்

கண்ணிற்கு இணை

14 வேல்வாள் கணைவண்டு வேலை விடமமுதஞ்
சேல்பங் கயங்குடங்கை செங்காவி—காலன்
வடுமான் கருவிளையை வண்சகோ ரத்தை
யடுமாங் குழையை யடர்ந்து

கொங்கையினியல்பு

15 அடர்ந்து திரண்டிடங்கொண் டண்ணுந்து விம்மிப்
படர்ந்து சுணங்கு பரந்து—தடங்கொண்
டணைத்துத் ததும்பி யிறுமாந்து வீங்கிப்
பணைத்துமுகம் பார்க்குமது பார்

கொங்கைக்கணிபொருளும் இணையும்

16 பார்தண் களபம் படீரம் புழுகுபனி
நீர்குங்கு மஞ்சாந்து நித்திலங்கச்—சாரவடங்
கற்பக வல்லி கரும்புகருங் கண்மாழை
பொற்சிறு பன்மாலை பொருப்பு

---

12 அநுராகம்-அன்பு, காமப்பற்று.

14 வேல், வாள், கணை, வண்டு, வேலை, விடம், அமுதம் சேல், பங்கயம், குடங்கை, செங்காவி, காலன், வடு, மான், கருவிளை, சகோரம்.

16 படீரம்-சந்தனம், புழுகு-புனுகு, மாழை-இளமை, பொன்.

17 பொருப்பிளநீர் வேண்மகுடம் பொற்குடஞ்செப் பியானை
மருப்புவனி சஞ்சக்ர வாகந்—திருக்கலசங்
கோங்கரும்பு பந்து கொலைச்சூது தாளமொக்கு
ணரீங்கியிரா தேபுழுகு நெய்

கூந்தலினியல்பும் அணிபொருளும்

18 நெய்த்துக் கருகி நெறித்துவிடும் பூமாலை
வைத்துக் கடைகுழன்று வார்ந்தொழுகி—மொய்த்தளிகள்
சூழ்ந்துவடி வம்பலம்பித் துஞ்சுடைத்தா யூட்டுபுகை
வாழ்ந்துதக ரங்கமழு மால்

19 மாலைகழு நீர்முல்லை மல்லிகைசெவ் வந்திபிச்சி
யேலம் வகுள மிலைத்தொடைதேன்—சாலநறும்
புன்னை பசும்பாளை பொலிந்து பிடித்தடக்கை
பின்னிவிட்ட கூந்தலெனப் பேசு

கூந்தற்கிளை

20 பேசுங் குழலைப் பிறங்குமுகி லென்று
மாசிலா நீலமணி யென்றும்—வீசுமற
லென்று மிருளென்று மெழிற்கவரி பாசிக்கொத்
தென்று முவமை யியம்பு

---

17 பொருப்பு, இளநீர், வேண்மகுடம், பொற்குடம், செப்பு, யானைமருப்பு, வனசம்-தாமரை, சக்ரவாகம், திருக்கலசம், கோங்கரும்பு, பந்து, சூது, தாளம்.

18 தகரம்-மயிர்ச்சாந்து.

19 மாலை, செங்கழுநீர், முல்லை, மல்லிகை, செவ்வந்தி, பிச்சி-சாதி மல்லிகை, ஏலம், வகுளம்-ஒருவகை மலர், இலை, தொடை, தேன், புன்னை, பாளை, பிடித்தடக்கை.

20 முகில், நீலமணி, அறல், இருள்; பாசிக்கொத்து.

மொழிக்கும் அதரத்திற்கும் பற்குமிணை

21 இயம்புமொழி கிள்ளை யிரங்கிசையாழ் வீணை
வயங்கு கருங்குயில்வண் பூவை—தயங்கினிய
பாகுகரும் பமுதம் பாறேன் மதுபழமென்
ஞகுமத ரம்பவள மாம்

22 ஆமே பவள மரக்காம்பின் முருக்கிலவம்
பூமெல் லிதழ்வீழிப் பொற்கனியாந்—தாமமணிக்
குல்லை யருந்தொண்டை கொடித்தூதுளை கோப
முல்லை முருந்தெயிறு முத்து

முகத்திற்கும் கழுத்திற்கும் இடைக்குமிணை

23 முத்தார் முளரி முழுமதிய மாந்திலகம்
வைத்துநகை காந்தி மருவுமுக—நத்துடனே
பூகம் வரிக்கழுத்துப் பூங்கொடிமின் வாளிவஞ்சி
மாகந் துடிநூன் மருங்கு

நுதற்கும் வெயர்வைக்கும் சொற்குமிணை

24 மருங்கொசியு மின்னூர்தம் வாணுதலை வானத்
தரும்புங் குழவிமதி யாயும்—புரந்தரன்றன்

---

21 மொழி: கிள்ளை-கிளி, யாழ், வீணை, கருங்குயில் பூவை-நாகண வாய்ப்புள், பாகு, கரும்பு, அமுதம், பால்,தேன், மது, பழம்; அதரம்-பவளம்.

22 அரக்காம்பு-சாதிலிங்கம், முருக்கு, இலவம்பூ, வீழி, மணிவரிசை, குல்லை-வெட்சி, தொண்டை, தூதுளை, கோபம், முல்லை, முருந்து; முத்து.

23 முகம்: முளரி-தாமரை, முழுமதியம், திலகம், கழுத்து, பூகம்: இடை: பூங்கொடி, மின், வாளி-அம்பு, வஞ்சி, மாகம், துடி, நூல்.

24 குழவிமதி, புரந்தரன் வில்-இந்திரன் வில்; முத்தம்; பாகு, கரும்பு.

வில்லெனவு முத்தம் வெயர்வெனவு மேவிரும்பிச்
சொல்லும்பா குங்கரும்புஞ் சொல்

புருவத்திற்கும் மூக்கிற்கும் கபோலத்திற்கும் காதிற்குமிணை

25 கரும்புருவம் வெண்பிறையுங் கைச்சிலையு நாசி
யரும்புகுமிழ் சண்பக மெட்பூவாம்—விரும்பியிடுந்
தற்பணங் கபோலந் தழைகாது கத்தரிகை
பொற்புவள்ளை யூசல் புகல்

கைக்கும் நகத்திற்கும் வாய்க்கும் நகைக்கும் மெய்க்குமிணை

26 புகலுகின்ற செங்காந்தள் புண்டரிகஞ் செங்கை
யுகிருவமை கிள்ளை யொளிர்மூக்காம்—பகர்குமுதஞ்
செய்யவா யொப்பாஞ் சிறந்தநகை வெண்ணிலவாம்
மெய்ம்மாந் தளிரென்ப வே

தோள், வயிறு, உந்தி, அல்குல், தொடை, முழந்தாள் கணைக்காலிற்குமிணை

27 வேயிருதோ ளாலுதரம் மிக்கவுந்தி நீர்ச்சுழியாஞ்
சேயமணி யாலவட்டந் தோரவு—தூயவல்குன்
மென்கதலி யூரு விளங்குமுழந் தாளலவ
னன்கணைக்கா ருவுவரா ஞடு

---

25 வெண்பிறை, கைச்சிலை; அரும்பு, குமிழ், சண்பகம், எட்பூ; தர்ப்பணம்; தழை, காது, கத்திரிகை, பொற்பு, வள்ளை, ஊசல்.

26 செங்காந்தள், புண்டரிகம்: கிள்ளை ஒளிர்மூக்கு; குமுதம், வெண்ணிலவு, மாந்தளிர்.

27 வேய், நீர்ச்சுழி, மணி, ஆலவட்டம், தேர், அரவு; கதலி; அலவன், வரால்.

புறவடிக்கும் உள்ளடிக்கும் குதிக்குமிணை

28 நாடும் புறவடியே நன்கமைந்த புத்தகமு
மோடுகின்ற வாமை யுறுப்புமாந்—தோடவிழுங்
கஞ்சமல ருள்ளடியே கந்துகமா குங்குதியே
வஞ்சமறச் சொல்லு மருங்கு

மகளிர் விளையாட்டிற்குரியன

29 மருங்குவளர் பூங்கா மலர்வாவி யூச
திருந்துமணிச் செய்குன்று தேமோ—விரும்பமுத
பானங் கிளிபூவை பந்துகழங் கன்னமயின்
மானமுல்லைப் பந்தர் வளர்ப்பு

மின்னார் முற்றேன்றுமிசை

30 வளர்க்குஞ் சிறுதூவி வண்டறுகாற் றும்பி
யளிக்குங் குலவுஞிமி ருர்ப்புங்—களிக்குஞ்
சுரும்பு மதுகரமுஞ் சூழ்விளரிப் பாட்டு
முருந்தெயிற்று மின்னார்க்கு முன்

தூதுக்குரியனவும் பாணர்பெறுவனவும்
கலித்துறை

31 முன்னுகும் பூவை முலையேறு தங்க முடிபுரைக்கப்
பின்னுகு மன்றிற் பெரும்புகழ்ப் பாணன் பெறும்பரிசில்
பொன்னு ரணிகலம் பூமா துரிமைவெம் போர்க்களமா
ரொன்னு ரிடுதிறை வென்னிடு வார்த முறையிடமே

---

28 புத்தகம், ஆமை; தோடவிழும் கஞ்சம்; கந்துகம்.

29 பூங்கா, மலர், வாவி, ஊசல், செய்குன்று, தேமா, அமுதபானம், கிளி, பூவை, பந்து, கழங்கு, அன்னம், மயில், முல்லைப்பந்தர்.

30 சிறுதூவி, வண்டு, அறுகால்தும்பி, ஞிமிர், சுரும்பு, மதுகரம்.

நவரசம்

32 இடமொன் றுமைக்கர னீந்தமெய்ப் பாகத் தெழிற்கிணை
[யாத்
திடமொன் றியவணச் சிங்காரம் வீரஞ் சிரிப்பருளே
யடமின் றியசினங் குற்சையுஞ் சாந்தமு மற்புதமுங்
கடியென்று மொன்பது மாநல்லிர சத்தைக் காட்டுதற்கே

பஞ்சவாசம், பஞ்சசயனம்

33 தற்கோல மேல மிலவங்கம் பாளிதஞ் சாதியங்காய்
நற்கூறை நாற்றமயிற் சேணம் பஞ்சணை நற்றுகிலே
விற்கூறு தூவிதண் மீப்பாய் சயனம் விளங்குமைந்தாம்
பொற்கோட் டலர்முலைப் பூவையன் னுரன்பு போர்த்த
[வர்க்கே

எண்வகை மணம்

34 கேட்பிர மம்பிர சாபத் தியத்தொடு கேண்மையுறக்
காட்டிய வாரிடந் தெய்வம் புகழ்பெறு காந்தருவ
நாட்டாசுரமு மிராக்கத நண்ணும் பைசாசமென்றே
சாட்டுத லெண்மண மாகுந் தகையன்பு தந்திடவே

முத்துப்பிறப்பிடம்

35 தந்தி வராகமருப் பிப்பி பூகந் தனிக்கதலி
நந்து சலஞ்சல மீன்றலை கொக்கு நளினமின்னுர்

---

32 சிங்காரம், வீரம், சிரிப்பு, அருள், சினம், குர்ச்சை, சாந்தம், அற்புதம். கடி.

33 தக்கோலம், ஏலம், இலவங்கம், பாளிதம்-சாதிக்காய்; மயிற்சேணம், பஞ்சணை, நற்றுகில், தூவி, தண்மீப்பாய் சயனம்.

34 பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசம்,

கந்தரஞ் சாலி கழைகன்ன லாவின்பல் கட்செவிகா
ரிந்து வுடும்பு கராமுத்த மீனு மிருபதுமே

செல்வமாதிருப்பிடம்

வெண்பா

36 துபமங் கொடிநகர் மின்பைந் துளவுவில்வங்
கதிர்விளைவுசங்கு கடறீபம்—வதுவைமனை
நற்பரிபாற் பாண்டமிவை நாண்மலரா ணீங்காது
நிற்பிடநல் லோர்நெஞ்சு மே

மதன்கணையெய்யுமியல்பு

37 நெஞ்சில ரவிந்த நீள்சூதங் கொங்கையிலே
துஞ்சும் விழியி லசோகமாம்—வஞ்சியர்தஞ்
சென்னியிலே முல்லை திகழ்நீல மல்குலிலே
யன்னவே ளெய்யுமியல் பாம்

வேணகர்க்கடையாளம்

38 ஆமே கொடிவள்ளை யம்புயமு நெய்தற்பூ
பூமே சுரும்பு புனலாட்டுக்—காமவே
டென்றலுறு மென்மறுகு தேராடன் மாடமதி
லன்றுநக ருக்கடையா ளம்

---

35 தந்தி, வராகம், மருப்பு, இப்பி, பூகம், தனிக்கதலி, நந்து, சலஞ்சலம், மீன்தலை, கொக்கு, நளினமின்னார் கந்தரம் சாலி, கழை, கன்னல், ஆவின்பல், கட்கவி, கார், இந்து, உடும்பு, கராம்.

36 துபம், கொடி நகர், மின், பைந்துளவு, வில்வம், கதிர்விளைவு, சங்குகள், தீபம், வதுவைமனை, நற்பரி பாற் பாண்டம், நல்லோர் நெஞ்சு.

37 அரவிந்தம்-நெஞ்சு, சூதம்-கொங்கை, அசோகம்-விழி, முல்லை-சென்னி, நீலம்-அல்குல்.

மின்னார்கைத்தொழில்

39 அம்பொற் றொடியணிமி னார்தங்கைக் கைந்துதொழில்
செம்பவள மெல்விரலைச் சேர்த்தெண்ண லம்பெழுதல்
பூசித் திலைகிள்ளல் பூத்தொடுத்தல் பண்ணெழில்யாழ்
வாசித்த லென்றுரைசெய் வார்

பெண்களின் பருவம்

40 வாரிமணி வெய்யோன் மதிபா ரதம்வள்ளல்
சீரி னறம்வளர்க்குஞ் செய்கைதா—னாரிகேள்
பேதை முதலாகப் பேரிளம்பெண் ணீருக
வீதெழுவர் தம்பருவ மெண்

---

39 செம்பவள மெல்விரலைச் சேர்த்து எண்ணல், அம் பெழுதல், பூசித்து இலை கிள்ளல், பூத்தொடுத்தல், பண்எழில் யாழ் வாசித்தல்.

40 வாரி: ஏழுகடல்-உவர் நீர், நன்னீர், பால், தயிர், நெய், கருப்பஞ்சாறு, தேன், பேதையின் பருவம்;

மணி: ஒன்பது-கோமேதம், நீலம், பவளம், புட்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம், வைரம்-பெதும்பை யின் பருவம்;

வெய்யோன்: கதிர் என்னும் ஆதித்தர் பன்னிருவர்-தாத் துரு, சக்கரன், அரியமன், மித்திரன், வருணன், அஞ்சுமான், இரணியன், பகவான், திவச்சுவான், பூடன், சவித்துரு, துவட்டா-மங்கையின் பருவம்.

மதி: திங்கள்-சந்திரகலை பதினாறு-மடந்தைப் பருவம்

பாரதம்: பாரதப்போர் 18 நாட்கள்-அரிவையின் பருவம்.

வள்ளல்: இருபத்தியொரு வள்ளல்கள் - முதல் ஏழு வள்ளல்: குமணன், சகரன், செம்பியன், துந்துமாரி, நளன், நிருதி, விராடன்; இடை ஏழுவள்ளல்: அக்குரன், அந்திமான், அரிச்சந்திரன், கன்னன், சந்திமான், சிசுபாலன், தந்தவக் கிரன்; கடை ஏழுவள்ளல்: எழினி, ஓரி, காரி, நள்ளி, பாரி, பேகன், மலையன்.

மகளிரான் மலர்மரம்

(கலித்துறை)

41 எண்மா தவிசண் பகம்பாலை புன்னை யெழிற்படலி
கொண்மா மகிழ்மரா வொடசோகு குராமுல்லைமின்
பண்பாட னிழற்பட னட்ட லாடற் பழித்த லுண்ணல்
கண்ணேக் குதை யணைத்தல் சிரித்தற்கலர்க் காடுறுமே

திணையும் திணைக்குரியனவும்

42 காடாகு முல்லை கழிநெய்த லாகுங் கல்லாங் குறிஞ்சி
நாடா மருத நடலைவெம் பாலையிந் நாட்டிற் றெய்வங்
கோடார் கரன் வருணன் குகனிந்திரன் கூறுதுர்க்கை
மாடாயர் மீன் புல்லர் குன்றவர் கானவர் மள்ளருமே

அட்டபோகம்

43 மேவுமெண் போகம் விளம்பிற் பெண்ணுடை
[வியன்கலன்பாற்
றாவியற் போசனந் தாம்பூலம் வீசு சுகந்த மன்பி
னுவெழிற் பாட்டலர் மெல்லணை யாமிவை நன்கமைத
ருவிக் கடவு ளருட்பாழி பெற்றவர் சார்விடமே

சிற்றின்பமும் பேரின்பமும்

44 விடமொன்று மைக்கண்ணி வாட்டமுஞ் சோக
[மிகுவிரகுந்
தடமென் ெருருவரைச் சாற்றுதல் சிற்றின்பந்
[தன்செயலே

---

41 மாதவி-பண்பாட, சண்பகம்-நிழற்பட, பாலை-நட்புற, புன்னை-ஆட, எழிற்படலி (பாதிரி)-பழிக்க, மகிழமரம்-உண்ண, மரா-நோக்க, அசோகு-தைக்க, குரா-அணைக்க, முல்லை-சிரிக்க.

43 எண் போகம்: பெண், ஆடை, அணிகலன், போசனம் தாம்பூலம், சுகந்தம், பாட்டு, அலர்மெல்லணை (பூஅமளி).

படுகின்ற துன்பப் பிறவியும் போக்கெனப் பண்புடனே
யிடமுன் றுணேயெனக் கூறுதல் பேரின்ப மென்பதுவே

ஐசுவரியம்-8; உபசாரம்-16; பேறு-16

45 வேண்டுநற் சுற்ற மிராசாங்க மக்கள் பொன்மேவு மணி
யாண்டிடுந் தொண்டு நெல்வாகன மாவிவையட்ட
[செல்வங்
காண்டவிசீதல் கைகால் கழுநீரொடு முக்குடிநீ
ராண் டளித்தே புனலாட்ட னல்லாடைய ணிதல்பினே

46 பின்னுமுந் நூலளித்தே தேய்வை பூசல் பிரசமலர்
தன்னேப் புனேத னிசியரி தூவற் றரனறை முன்
னென்னிகர் தீபங் கர்ப்பூ ரமிட லமுதேந்தல் கோடன்
மன்னடைக் காய்மலர் மந்திரத் தர்ச்சித்தன்
[மாண்பெனவே

47 என்னுமிவ் வீரெட் டுபசார மாம்வலி யேரிளமை
நன்மக்க ணோயின்மை வாழ்நாட் புவிமின் னலனுகர்ச்சி
பொன்னறி வூக்க மிகுகல்வி வெற்றிபுகழ் பெருமை
நென்முத லீரெட்டுப் பேறுநற் புண்ணியர் நேர்வனவே

---

45 ஐசுவரியம் எட்டு: சுற்றம், இராசாங்கம், மக்கள், பொன், மணி, தொண்டு (அடிமை), நெல், வாகனம்.

46 உபசாரம் பதினாறு: தவிசு அளித்தல், கைகழுவ நீர் தரல்; கால் கழுவ நீர்தரல், முக்குடிநீர் தரல், புனலாட்டல், ஆடையணிவித்தல், முந்நூல் (முப்புரி) அளித்தல், தேய்வை பூசல், மலர்சாத்தல், மஞ்சள் அரிசி தூவல், நறும்புகை காட்டல், தீபம் ஏற்றல், கர்ப்பூரமிடல், அமுது ஏந்தல், அடைகாய் தரல், மந்திரமலரால் அருச்சித்தல்.

47 பேறு பதினாறு: வலி, ஏர் (அழகு), இளமை, நன்மக்கள், நோயின்மை, வாழ்நாள், நலன் (நல்லூழ்) பொன், நுகர்ச்சி, அறிவு, ஊக்கம், கல்வி, வெற்றி, புகழ், பெருமை, நெல்.

அறம்

48 வண்ணான் புன்னாவிதன் காதோலை சோலை
[மடந்தடம்வெண்
சுண்ணம் மறவைப் பிணஞ் சுடறூரியஞ் சோறளித்தல்
கண்ணாடி யாவிற் குரிஞ்சு கல்வாயுறை கண்மருந்து
தண்ணீர்ப் பந்தர் தலைக்கெண்ணெய் பெண்போகந்
தரலையமே

49 மேதகு மாதுலர்க்குச் சாலை யேறு விடுத்தல்கலை
யோதுவார்க் குண்டி விலங்கிற் குணவோடுயர்
[பிணிநோய்க்
கீதன் மருந்து சிறைச் சோறளித்த லியல்பிறரின்
மாதுயர் காத்தனற் கன்னியர் தானம் வழங்கலுமே

50 கற்ற வறுசம யத்தார்க் குணவு கருதும்விலை
யுற்ற தளித்துயிர் மீட்டல் சிருருக் குதவனற்பான்
மற்று மகப்பெறு வித்தல் சிருரை வளர்த்தலெனப்
பெற்ற விவற்றினை யெண்ணான் கறமெனப் பேசுவரே

தசாங்கம்

51 வரையாறு நாடு நகரூர் துரக மதகரியே
விரையாரு மாலை முரசம் பதாகைமெய் தானையென்னு

---

48 வண்ணான், நாவிதன், காதோலை, சோலை, மடம், தடம், சுண்ணம், அறவைப் பிணஞ்சுடல், தூரியம், சோறளித்தல், கண்ணாடி, ஆவிற்கு உரிஞ்சு கல், ஆவிற்கு வாயுறை, கண் மருந்து, தண்ணீர்ப் பந்தல், தலைக்கு எண்ணெய், பெண் போகம் தரல், ஐயம்.

49 ஆதுலர்க்குச்சாலை, ஏறுவிடுத்தல், கலைஓதுவார்க்கு உண்டி, விலங்கிற்கு உணவு, நோய்க்கு மருந்து ஈதல், சிறைச் சோறளித்தல், பிறரின் துயர்காத்தல், கன்னிகாதானம்.

50 அறுசமயத்தார்க்கு உணவு, கருதும்விலையளித்து உயிர்மீட்டல், சிருருக் குதவல், மகப்பெறுவித்தல், சிருரை வளர்த்தல்.

முரையார் தசாங்கத்தி னெவ்வொன்றை நாடி
[யுறவகுத்தே
தரையாளு மன்னர் முதலா யெவருக்குஞ் சாற்றுகவே

அட்டமங்கலம்

52 சாற்றுங் கவரி நிறைகுடந் தோட்டிமுன் றற்பணமா
மேற்றிய தீப முரசம் பதாகை யிணைக்கயலே
நாற்றிசை சூழ்புவி மீதட்ட மங்கல நன்குழையின்
மேற்றிகழ் வேற்றடங்கட் செய்யவாய்ப் பைம்பொன்
[மெய்த்திருவே

ஆடவர் சிறப்புவமை

53 திருமான் முருக னளகேச னிந்திரன் சேண்முகிலே
பொருமாரன் வீமன் விசயன்மெய்க் கன்னன் புகழ்த்
தருமன்
வருமான சீவகன் மூவேழு வள்ளல் வனசநிதி
தருமாமணி சங்கந் தேனுவைப் போலவுஞ் சாற்றுவரே

---

51 வரை, ஆறு, நாடு, நகர், ஊர், துரகம்-பரி, மதகரி, மாலை, முரசம், பதாகை.

52 கவரி, நிறைகுடம், தோட்டி, தற்பணம், தீபம், முரசம், பதாகை, இணைக்கயல்.

53 உவமான சங்கிரக நூல்கள் பெண்கள் உறுப்பு உவமைகளைச் சிறப்பித்துப் பாட, இரத்தினச் சுருக்கத்திலுள்ள இப்பாடல் ஆடவருக்குரிய சிறப்பினை எடுத்துரைக்கின்றது. அறுவகை இலக்கணமும், பிரபந்தத் திரட்டும் ஆடவர்க்குரிய உவமைகளைச் சிறப்பித்து உரைப்பது குறிப்பிடத் தக்கது.

திருமால், முருகன், அளகேசன், இந்திரன், மாரன், வீமன் விசயன், கன்னன், தருமன், சீவகன், மூவேழு வள்ளல் முதலானோர் ஆடவர்க்குரிய சிறப்புவமை.

மடவார் சிறப்புவமை

54 வதியு மின்னார்தமைப் பேசத் திருவுமை வாணிபதி
ரதியை யும்பர்பதி வாழுமற்றோரை யரம்பையரை
மதிதரு மான்பிடி யன்னங் குயில்கிள்ளை மாமயிலைப்
பொதியவொப் பார்படை யாவா ரெழின்மதன் போர்
[செய்யவே

சிவன் பெருமை

55 போராடு வேளை விழியழ லேவிப் பொடிப்படுத்தி
நேரார் புரத்தை நகையா லெரித்து நிலாவணிந்து
காராழி நஞ்சுண்டு தக்கன்றன் வேள்வி கடிந்தரக்க
னோராத் தலைநெரித்தே சண்டன் வீழ வுதைத்தனனே

56 உதிக்குங் கடவுட் கதிரோன்றன் பல்லை யறவுதிர்த்து
விதிக்குந் தலையைத் திருகித் தகர்வரு வெங்கனற்கு
மதிக்குங் கரமறுத் திந்துவைத் தேய்த்துயர் வாணி
[துண்டஞ்
செதிக்கும்படி தள்ளி யீமத்துட் டாண்டவஞ் செய்
[தனனே

57 தாண்டவஞ் செய்து தழலுரு வாகித் தரையிடந்து
கீண்ட வனுக்குந் தெரிவரிதா யளகேசனுக்கு
வேண்டிய சங்கநிதிமுத லாக வியந்தளித்தே
காண்டகுஞ் சோதி யென்பார்க் கெய்துமே கலை
[மாதவமே

58 மாதவர் வேள்வி புரிந்தே விடுத்த வரியரவு
போதகம் வேங்கை மழுமான் முயலகன் பொங்கனலென்

---

54 திருமகள், உமை, வாணி, ரதி, அரம்பையர்; மதி, மான், பிடி, அன்னம், குயில், கிள்ளை, மயில்.

55-60 சிவனின் பெருமைகளும் செயல்களும் எடுத்துரைக்கப்படுகின்றன.

ஞேதரும் வெம்பகை வீருெழித் தேதன் னுருவமைத்த
காதணி சங்கக் குழையான் சரணங் கருதுமினே

59 மின்னும் பவளமுஞ் செவ்வானும் வேணி மெய்யூர்தியுடன்
றுன்னுங் கொடிவிடை யேந்தல் கபாலந்துடி சுடர்மான்
மன்னுங் கொடுங்கதிர்ச் சூலா யுதம்படை மாதவற்கு
முன்னந் திகிரி யளித்தோன் முடித்தது முற்கங்கையே

60 கங்கையும் வில்வமு மென்பு மராவுங் கடுக்கையும்வெண்
டிங்களுந் தும்பையு மாரு மெருக்குந் திகழறுகும்
பங்கய னன்னத் துருவாகி நாடிப் பறந்தறியா
வெங்கள் பிரான் பவளச் சடைமீ தணிந்தேர் பெற்றதே

விநாயகன் பெருமை—வெண்பா

61 தேய்ந்த தினிவளருஞ் செல்வப் புகழுறுமென்
ருய்ந்து மதிபொதியு மச்சடைபோற்—ருேய்ந்தநிறச்
செந்துவர்மா மேனியெழிற் செல்வன் கழன்மலரில்
வந்திறைஞ்சு மன்பரெனும் வண்டு

62 வண்டார் மதப்பிரச வல்விலங்கு கிம்புரிதூண்
டண்டார் புழைச்சிந் துரத்தடக்கைத்—துண்டக்
கழைமருப்புச் செங்கட் கறையடி வெங்கோபக்
குழைசெவிநால் வாய்க்குஞ் சரம்

முருகன் பெருமை

63 சரவணத்துதித் தாறு தாயர்மகிழ் சண்முகனேர்
குரவனென வீசற் குமார—னரிகுறவ
ரிந்திரற்கு மாமருக னேந்தயிலோன் மாமயிலோன்
கந்தன்சே வற்றுவசன் காண்

64 காணுஞ் சசிமகளைக் கானவளைக் கைப்பற்றி
நாணவய னிந்திரனன் ஞடுறவே—பூணு

61-62 விநாயகன் பெருமை

63-64 முருகன் பெருமை.

முரண்சூர்செற் றக்கடம்பின் மொய்ம்பனடி யார்க்குக்
கருணை பெருகின்பக் கடல்

திருமாலின் பெருமை—நெடில் விருத்தம்

65 கடலிற் றுயின்றுங் கடலடைத்துங் கடலைக்கடைந்துங்
[கடல்சுவறக்
கணையொன்றேவிக் கடற்புவனங் கடந்துஞ் சரணெேன்
[ருலளந்து
முடலைக் குறைத்தும் புவியிடந் துண்டுமிழ்ந்து முடலைச்
[சகடுதைத்து
முரிக்களிறே டிணைமருத முனிந்தும் விளவிற்
[கன்றெறிந்து
மடலுற்றெதிர்ந்து பொருங்குருகி னலகை யிடந்துங்
[கலைகவர்ந்து
ம்மாயர்குலத்தில் வந்துதித்து மசுரர்கிளையை
[வேரறுத்து
மிடலுற் றலகை முலையருந்தி யான்பாலிழுது வெண்ணெய்
தயிரெடுத்தாங் கருந்திப் பதினுருயிரவர் குரவை
[கொண்டானே

66 குரவை குனித்து விளையாடிக் குன்று குடையாயெடுத்
[தொருகாற்
கொண்டறடுத்து வேயூதிக் கோலிற் றுயின்று நிரையினை
[மேய்த்
தரவி னடித்து வருமுல்லை யாயர் தலைவன் யமுனையினீ
ராடுஞ் சிறிய கருஞ் சிறுக்க னளிக்க மகவையந்தணர்க்
[காய்
விரைவி னழைக்க யமபுரம் போய் மீண்ட குரிசிற்றி
[கிரியினல்
வெயிலை மறைத்து வலம்புரிவாய்விட்டு மதமா
[வெங்கரவாற்

65-6) திருமால் பெருமை.

பரவியழைக்க வந்தருளிப் பார்த்தன் றனக்குத்தேர்கடவிப்
பரிந்து போற்றத் துகிலிழந்த பாஞ்சாலிக்கு
[மளித்தானே

67 அளிக்குஞ் சிறுசே லுருவெடுத்து அரியமறையை முன்
[கொணர்ந்து
மாமையுருக்கொண் டடைகிடந்து மாதி வராக
[வுருவெடுத்துங்
களித்துத் தூணின் மடங்கலுருக் காட்டிக் கனக னுடல்
[பிளந்துங்
கடும்போர் வலிய மாவலியைக் காலினடக்கிப் புவி
[கவர்ந்தும்
வளிக்குந் தொலையாமுதுமதுகை வாணன் புயமா
[யிரமறுத்தும்
வஞ்சக் கஞ்ச னுடல்செகுத்தும் வனம்போயரசுதுறந்
[திருந்துங்
குளிக்குஞ் சரத்தாற் ருடகையைக் கொன்று மிகல்
[வாலியைக் கடிந்துங்
கொடிய கவந்தன் புயந்துணித்த கொண்டன முள்ளங்
[குடிதங்கும்

முடுகுவிருத்தம்

68 தங்குந்திரு மறுமார்ப னயோத்தித் தலைவன் பலவீமன்
றடவடமதுரைத் திருநகராளன் தரைமகள் சானகிதன்
கொங்கைத் துணைவன்றசரத ராச குமாரன் வசுதேவன்
குலம்வரு முதல்வனந்தன்மைந்தன் கோதை
[யசோதையிளஞ்
சிங்கங் கோசலை செல்வன் தேவகி சிறுவன் சனகையர்
[கோன்
றெய்வப்புது மணவாளன் பஞ்சவர் செல்வச் சிறுதூதன்
பொங்குங் கடலிடை யறிதுயில் கூரும் புருடன் சங்குசரம்
பொருதண்டாழி வில்வாளுடனேந்தும் புனிதனை
[நினைவீரே

வெண்பா

69 வீறுங் கொடியும் வியனூர்தியுங் கருடன்
கூறுமெழுத் தெட்டுடையான் கோபியர்மா—றேறுகின்ற
மாயவன் பின்னைசத்ய பாமை யுருக்குமணி
நேயன் றிருத்தா ணினை

பிரமன் பெருமை

70 நினைக்கி லயனேறு நெடுங் கொடியு மன்ன
நனைக்கமலந் தானிருப்பா நாட்டுந்—தனிப்படையே
தண்டமுந் நூலாய்த் தவளமலர் வாணியவ
னெண்டொடி யென்றுள்ளத் துணர்

இந்நூன்முறை

71 உணரும் படியே யுரைத்தவற்றை யெல்லா
மிணர்மென் றொடையா மியல்பாற்—றுணையெழுத்தாற்
சொல்லாயச் சொல்லின் றொகுதிதனைத் தொடுக்க
வல்லார்க் கணிபெறலா மால்.

அறுவகை இலக்கணம்

அணியிலக்கணம்

1 செம்பொற் குன்றமும் செக்கரும் கனலும்
மாணிக்கம் ஆதியும் மயிலோன் விடையோன்
கணபதி முதலினர் காட்சிக் கிணையே (3)

2 கடலும் மேகமும் கரியமால் வரையும்
இரவும்மைக் குழம்பும் இனையன யாவும்
நெடியோன் உமைஎமன் இந்திரன் வள்ளி
அவுணர்க் கிணையென் றறைவது வழக்கே (4)

3 பொன்னிறம் பிரமன் பூமகள் குஞ்சரி
என்னும் மூவர்க் கியல்பாம் அன்றே (5)

4 அன்னம் கலைமகள் அணிகாட் டுதல்போல்
மஞ்ஞையும் கிளியும் மலைமகள் மறமகள்
போலுமென் றுரைப்பது புலவோர்க் கியல்பே (6)

5 வெள்ளி மால்வரை விடைஅயி ராவணம்
பொன்னூர் வேழம் குகன்கொடி அயன்பரி
ஆதிக் கிணையென் றறையத் தகுமே (8)

6 வேலொடு மின்னலை ஆழியொ டிரவியைச்
சங்கொடு மதியைச் சாற்றுத லியல்பே (9)

7 மயிலிணை மரகதம் என்கை யாதியை
தெய்வச் சின்னத் துவமைச் சிறப்பெலாம்
தொண்டர்தம் மொழிவழி சொல்வது முறையே (10)

8 வசிட்டனை அகத்திய மாமுனி யாதியர்
தம்மைத் தவத்தோர்க் கிணைசொலல் தகுமே (11)

9 இராகவன் தருமன் முதலினர் தம்மை
நீதிமன் னவர்க்கு நிகர் சொலல் இயல்பே (13)

10 வீமன் வென்றிவில் விசயன் ஆதியரை
வீரருக் குவமை விளம்பிடல் இனிதே (14)

11 வணிகர்க்கு அளகைக் காவலன் தன்னை
உவமை கூறிடல் உத்தமம் ஆமே (15

---

1 செம்பொற் குன்றம்-மயிலோன், செக்கர், கனல்-விடையோன், மாணிக்கம்-கணபதி

2 கடல்-நெடியோன், மேகம்-உமை, கரியமால் வரை-எமன், இரவு-இந்திரன், மைக்குழம்பு-வள்ளி

3 பிரமன், பூமகள், குஞ்சரி-பொன்னிறம்

4 மஞ்ஞை-மலைமகள்; கிளி-மறமகள்

6 வேல்-மின்னல், ஆழி-இரவி, சங்கு-மதி

8 தவத்தோர்க்கு இணை-வசிட்டன், அகத்தியன் முதலானோர்.

9 நீதிமன்னவர்-இராகவன், தருமன்

10 வீரர்-வீமன், விசயன்.

11 வணிகன்-அளகைக் காவலன்.

12 முளைகொணர்ந்து அடிசில் இட்டோன் மூர்த்தி
சடையன் வேளாளர் தங்கட் குவமையே (16)

13 மிடியறக் கொடுக்கும் வீறுடை ஒருவனைக்
கன்னனு தியர்க்கிணை கழறலும் அன்றி
அரன்அரி குகவேள் அனையான் எனினும்
முத்தமிழ்ப் புலவோர் முனியா ரன்றே (17)

14 கார்மணல் ஒட்டமும் பாசிக் கொத்தும்
மேகமும் இருளும் விரிமலர்ச் சோலையும்
வண்டுக் கூட்டமும் மற்றோர் விதப்பனை
காய்த்துள கொத்தும் கருங்குழற் கிணையது
பின்னுறிற் கொன்றைக் காயெனப் பிறங்கும்
அவிழ்ப்புறில் அகத்திக் காய்க்கொத் தனையதாம்
இன்னமும் பலவா றியம்புவர் புலவோர் (18)

15 நெடுமா லனையான் நெற்றி நிமிர்பிறை
செந்திரு அன்னாள் சிறுநுதல் ஏனையே (19)

16 விற்பொரு புருவமும் விதுவொடு கமலமும்
அன்னமா முகமும் அவன் அவள் பொதுவே (20)

17 காகமூக் கென்னக் கவின்தரு புருவமும்
போர்விடைக் கண்ணும் புருடர்க்குரியவே (21)

---

12 வேளாளர்-முளைகொணர்ந்து அடிசில் இட்டோன், சடையன்.

13 வள்ளல்-கன்னன், அரன், அரி, குகவேள்.

14 கருங்குழல்: கார்மணல் ஓட்டம், பாசிக்கொத்து, மேகம், இருள், விரிமலர்ச்சோலை, வண்டுக்கூட்டம், காய்த்துள கொத்து; பின்னல்-கொன்றைக்காய்; அவிழ்ந்தபின்னல் அகத்திக்காய்க் கொத்து.

15 நெடுமால் அனையான் நெற்றி நிமிர்பிறை.

17 புருடர் புருவம்: காகமூக்கு, கண்: போர் விடைக்கண்,

18 கரும்பொடு வாளெனக் கவின்றரு புருவமும்
கணைவேல் உற்பலம் கயல்பொரு கண்ணும்
கோதையர்க் கன்றிக் கூறவொண் ணதே (22)

19 பெண்கொடி நாசியின் பேரெழிற் கிணையெனச்
சண்பக மலரையும் சாற்றுநர் சிலரே (23)

20 கன்னிதன் கவுட்கிணை ஆடியும் காதிற்கு
ஊசல்கத் திரிக்கோல் வள்ளைக் கொடியும்
கூறுநர் பற்பலர் குவலயத் துளரே (24)

21 கொவ்வையில் வீழியிற் குலவுசெங் கனிகளும்
பவளமும் இதழ்க்கிணை பகர்ந்தனர் பாவலர் (25)

22 முருந்தும் மாதளை அரிசியும் முல்லை
அரும்பும் நகைக்கிணை யறைவது முறையே (26)

23 பண்ணும் கிள்ளையும் பாலும் அமிழ்தும்
குயிலும் தேனும் கோதைசொற் கிணையே (27)

24 சிறுமாங் கனியுடன் ஆடிக் காம்பும்
நங்கையர் தாடிக் கிணைசொல னலமே (28)

---

18 கோதை புருவம்-கரும்பு, வாள்; கண்-கணை, வேல். உற்பலம், கயல்பொருகண்.

19 பெண் நாசி-சண்பக மலர்.

20 கன்னிகவுள்-ஆடி, காது-ஊசல், கத்தரிக்கோல், வள்ளைக் கொடி.

21 இதழ்-கொவ்வை, வீழி, செங்கனி, பவளம்.

22 நகை-முருந்து, மாதளை, அரிசி, முல்லை அரும்பு.

23 கோதை சொல்-பண், கிள்ளை, பால், அமிழ்தம், குயில் தேன்.

24 சிறுமாங்கனி, ஆடிக்காம்பு.

25 கமுகும் சங்கமும் கன்னியர் மிடற்றுக்கு
உவமை யாகுமென் றுரைத்தனர் புலவோர் (29)

26 குடமும் குன்றமும் குஞ்சரக் கோடும்
முடியும் தாளமும் மொக்குளும் பந்தும்
பம்பரம் இளநீர் கூவிளம் பழமுதல்
பிறவும் பாவைதன் பெருமுலைக் கிணையே (30)

27 எறும் பொழுக்கு இருப்புச் சலாகை போலும்
உரோமத் தணியுறும் உந்திநீர்ச் சுழிஆல்
இலைவயி றென்றிடல் ஏந்திழைக் கிசைவே (31)

28 மென்தோட் பேதைதன் முதுகினை வெருகந்
தளிரெனச் சாற்றலும் தக்க இயல்பே (32)

29 மலையென எழுவன வழங்கும் தோள்களும்
பாய லாமனப் படர்தரு மார்பமும்
காளையர்க் குரித்தெனக் கழறினர் கற்றோர் (33)

30 யாழெனு முன்கையும் கெளிறொடு பயற்றங்
காய்பொரு விரல்களும் காந்தள் மலர்நிகர்

---

25 மிடறு–கமுகு, சங்கம்.

26 முலை-குடம், குன்றம், குஞ்சரக்கோடு, முடி, தாளம், மொக்குள், பந்து, பம்பரம், இளநீர், கூவிளம் பழம்.

27 உந்தி-எறும்பொழுக்கு, இருப்புச் சலாகை, நீர்ச்சுழி, இலை-ஆல் இலை.

28 முதுகு-வெருகந்தளிர்.

29 காளையர் தோள்-மலை; மார்பு–பாயல்.

30 நங்கையர் முன்கை-யாழ்; விரல்-கெளிறு, பயற்றங் காய்; அங்கை-காந்தள்; உகிர்-கிளிமூக்கு.

அங்கையும் கிளிமூக் கன்னகூர் உகிரும்
நங்கையர்க் குரித்தென நவின்றனர் நாவலர் (34)

31 மேகமும் நதிகளும் விண்ணூர்த் தருவும்
சிந்தா மணியும் தேனுவும் தெய்வமும்
தினந்தொறும் கொடுப்போன் செங்கைக் கிணையே (35)

32 சிறுகீரை வித்துறு செம்பொற் றட்டமும்
தேர்த்தட்டும் வாவியும் தேன்கூடும் மின்னார்
கடிதடத் துவமையாக் கழறினர் முன்னோர் (36)

33 சீயம்நூல் உடுக்கை ஆமெனத் திகழ்இடைக்
காரிகை இருக்கைக் களிற்றின் கும்பம்
போலு மென்றும் புகன்றனர் புலவோர் (37)

34 துதிக்கையும் வாழையும் போலும் துடைகளும்
அலவ னுமென் றவிர்முழந் தாள்களும்
காகளம் மகரம் பொருகணைக் கால்களும்
தராசுத் தட்டொடு தெங்கிளங் குரும்பை
யெனத்திகழ் கறண்டையும் எலுமிச் சம்பழம்
புரையுங் குதிக்காற் பொற்பும் ஆமையும்
செம்பஞ் சும்அன்ன சீரடித் துணைகளும்
மஞ்சட் கொம்பென வயங்கும் விரல்களும்

---

31 கொடுப்போன் செங்கை-மேகம், நதி, விண்ணூர்த் தரு, சிந்தாமணி, காமதேனு, தெய்வம்.

32 கடிதடம்: சிறுகீரை வித்து, செம்பொன்தட்டம், தேர்த் தட்டு, வாவி, தேன்கூடு.

33 இடை-சீயம், நூல், உடுக்கை.

34 துடை-துதிக்கை, வாழை; முழந்தாள்-அலவன் கணைக்கால், காகளம், மகரம்; கறண்டை-தராசுத்தட்டு, தெங் கிளங்குரும்பை; குதிக்கால்-எலுமிச்சம் பழம், புரை அடி-

சிப்பின் நிரைபோற் றிகழ்நகப் பந்தியும்
மானுறழ் கண்ணூர் மாந்தளிர் மேனியிற்
பாதி யாமெனப் பகர்ந்தனர் பாவலர் (38)

35 செந்தா மரையென் றடிகளைச் செப்பலும்
கால்உகிர் மதியெனக் கழறலும் தெய்வத்
தன்மைக் குரித்தெனத் தழுவுநர் சிலரே (40)

36 ஒந்தி போலும் ஒள்வளை மூக்கென்று
உரைத்த லாதிய ஒருவலும் உணர்வால்
அட்டமிச் சந்திரன் அகத்திப் பூஇணை
யாமென லாதிய சேர்த்தலும் அழகே (41)

37 நிகழ்த்தரும் கடவுள் நீதியுங் கருணையும்
இரவியும் மதியும் போலும் என்றும்
இயல் உமை இசைதிரு நாடகம் நாமகள்
அனையன என்றும் அம்பரப் பெயர்கொடு
கருநிற முடைத்தாய் மீனெடு காண்டலில்
புணரியும் வானும் புரையு மென்றும்
பற்பல் விதமாப் பகராது உவமை
இயல்பினைப் பகர்தரும் இந்தமட் டடக்கி
உடைமை யியல்பும் உரைக்குதும் சிறிதே (43)

பொற்பு, ஆமை, செம்பஞ்சு; விரல்-மஞ்சட் கொம்பு; நகப்பந்தி
சிப்பின் நிரை.

35 அடி-செந்தாமரை; கால் உகிர்-மதி.

36, மூக்கு-உந்தி, அட்டமிச்சந்திரன், அகத்திப்பூ.

பிரபந்தத் திரட்டு*

உவமாரூட வியப்பு சார்வியல்

கூந்தல், வகிர், மயிர்முடி, பின்னியகுழல்

1 கார் கூந்தற் கமுகு கொன்றைக் காயிருள் பூஞ்சோலை
கருமணல் சைவலம் வண்டினம் கவரி நீன்மணியே
சாரரம்பை தாழைமலர் கூந்தலுக்காம் வகிரே
தாரைவனம் பகரிலைக் காம்பாங் கொண்டைபந்துஞ்

---

* இந்நூலின் ஐந்தாவது இயலான உவமாரூட வியப்பு சார்வியல் உவமான சங்கிரக நூல்களைப் போலவே மகளிர் உறுப்புகளுக்கான உவமைகளைத் தொகுத்துத் தருகிறது. உவமைப் பொருட்கள் தவிர வேறு பல செய்திகளும் இவ்வியலில் கூறப்பட்டுள்ளன. நூற்பொருள் இயைபு கருதி உவமைத் தொகுப்புகள் பற்றிய பாடல்கள் மட்டும் இங்குத் தரப்படுகின்றன. இப்பொருள் குறித்த செய்திகளை ஒரு சேரக் காண்பதற்கு இஃது துணையாக அமையும். இவற்றிற்குரிய விளக்கங்களை அந்நூலில் விரிவாகக் காணலாம்: பிரபந்தத் திரட்டு (பக் 103—148) பதிப்பும் உரையும்: டாக்டர் அன்னி தாமசு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை.

சேர்மலர்ச் செண்டுங் கமடந்தானுமா முடித்தல்
சீறரவின் படமழைக்கால் வீணை நுனி விசிறி
யார்சடை பாம்பே பிடிக்கைச் சங்கிலி வாழைச்சீப்
பணிசீப்புத் தைத்தகுழல் புலியுரு வமாமே (1)

குழல், சடை, கூந்தலின் இயல்பு

2 வகிர்குழற் கம்பெற்று வில்லு மறையா மின்காரும்
வாரியுங் தோணியு மிருளு மகன்வில்லு மாகுந்
திகழ்சடை தென்னம்பாளை மாலையுமே பொருந்துந்
திருமலருந் தரளமதுந் திகழ்கூந்த லுடுவான்
றகவுநெய்த்துச் சுருண்டு கடைகுழைந்துவார்ந்தொழுகித்
தழைந்தளிகள் சூழ்ந்து வடிம்பலங்கி நிறங்கருகிப்
புகறகரங் கமழ்ந்துநீண் டகிற்புகைக் குலாயவண்
பூவணிந்து நெளிந்து வரிவரியாகுங் குணமே (2)

நுதல், புருவம்

3 ஏறுநுதல் விற்பிறை புலிக்கை நகந்தோணி
தேறுபுருவக்கு மிவை செப்புபின் சிங்காடி
கூறுவளை வாளிவை குறிப்பொடு நெறித்து
மீறியிடங் கோட்டல் சுழித்திட்டல் குழிப்பாமே (3)

கண்

4 விண்ட தாமரை காவிகூற்றே கருவிளையம்புமாம் பிஞ்சின்
கண்டம் வாளயில் கடல்விட மமுதமே கயல்பிணை
சகோரந்தான்
வண்டுவெள் குடங்கை கணு மரசிலை மையிட்ட கண்ணுமே
கொண்ட பானுவுமதியு மேயிணை விழிக்குறியிரு
நோக்காமே (4)

முகம்

5 மதிகமலங் குடைகிடுகு கடல்வளை மாயவன்மின்
வட்டிலை நீர்நிலை அமுத மாடிவட்டின் மயிற்க
ணதிர்சிறை சகோரம் வலைவானமாம் வதன
மன்பு வெறுப்பே காட்டல் குளிர்தல் கோணலுமே

முதுநாண மடைதல் கொர்பங் கொள்ளல் கவிவாய்
முகிழ்த்தல் மலர்தலுங் குணமாங் குறுவேர்வை
முத்தந்
துதியுடுப் பாம்புத்தி மலரரும்பு தண்டுலமே
சொல்லன்னங் கரும்புவரி சொல்லுவது நன்றே (7)

காது, கன்னம், மூக்கு, இதழ்

6 காதிற்கு வள்ளை கத்திரிகை யூசலுமாங்
காட்டுந் தோரணமாஞ் சக்கரமு மாந்தக்கை
பேர்த மருக மாகுங் கபோலங் கண்ணுடி
பொன்னிலை நீர் நிலை மயிலின்கட் சிறகுசானே
போதுகுமிழ் சாதியெட்பூ முருக்கத்தி முகைப்பூ
வொண் மூக்காங் கிளிமூக்கு மொக்குநறை யிதழ்க்கே
யாதல்கிடை துப்பிலவு கோபமுருக் கோடுசெவ்
வாம்பல் கொவ்வை வீழிவெல்லத்
திரட்சிகிளிமூக்கே (8)

வாய், எயிறு

7 வாய்குமுதம் வீழிதொண்டை வாரிச மகத்திச்
சேயமல ரெயிற்றுவமை செம்பவள முத்தோ
டாயுமுல்லை குல்லைகழு முண்முருந்து வான்மீன்
தூயமுது தூதுளைபொன் மாதுளமு மாமே (10)

இதழ், வாய், எயிறு

8 பாற்கடல் குறிஞ்சி யமுதங்கழை பலன்க
ளேற்குமித ழவ்வுவமை யேற்குமலர் வாய்க்கு
மீற்குவை யரும்பரிசி வாரிபிறை வெண்சங்
காற்றலுறு மம்புமறை யாகுநறை பற்காம் (11)

சொல், நகை

9 முக்கனி சுரும்புகுயில் கிள்ளைமுதிர் சீனி
சற்கரை கற்கண்டுவெல்லம் தேனமுதந் தண்பால்
கைக்கழை யிசைக்குழல்கள் வீணைமலி பூவை
சொற்குநகை யாம்பவளம் வெண்டரள மாலை (12)

நகை, கழுத்து, புயம், கை

10 பின்னு நகை யாடி திங்கள் பாளைவிரி வொக்குந்
துன்னிமலி சங்குகளம் பூகமும்பின் சொல்ப
மன்னுமலர் மாலைகழை மூங்கில்புயம் யாழ்கை
பொன்னின் மலர் காந்தளொடு மாந்தளிரு மாமே (13)

கைவிரல், நகம், சுணங்கு

11 கையின் விரலே பயற்றங்காய் கெளிறுகையி
ஞெய்ய வுகிர் வச்சிர நுடங்கு கிளிமூக்கே
யய்ய மணிநுத்தி பொனலங்கு மலர் வேங்கை
கொய்யவுறு துத்திமலர் கூறுமணி முத்தே (14)

நகில்

12 சூதுகிண்ணங் குரும்பைசெப்புச் சுடிகைகோங் கரும்பு
சொற்றாளம் குமிழ் சிமிழ் தாமரைபம் பரமே
யோதுமலை யிளநீர் சகோரம்பந்து கலசமுறுங் கும்பங்
குடமருப் பியானை சக்கரவாளந் தீதின்
மாதுளை யெலுமிச்சம்பழம் பட்டடை போர்திரு
முலையா மணக்களபஞ் சந்தனங் குங்குமஞ் சாந்
தூதுமளி மலர்ச்சவா தொழுகு புழுகிவை யார்ந்
தூர்ந்து கமகமென்று முகமாக்கி யொளிவிடுமே (15)

வயிறு, உந்திச்சுழி, வயிற்றின் மடிப்பு, மயிரொழுங்கு

13 ஆலிலைகண் ணுடிவயி ருஞ்சுழியி லஞ்சிமல
ரம்புயமு நாபிபணமுஞ்
சாலுமலை யேறுபடி வாழைகனி தாறுமடி
தந்தமடி யாமயிர்வரி
யோலமிடும் வண்டொழுகெ றும்பொழுகு சங்கிலியு
றுங்கரிபி ணித்ததறியே
நீலமணி சைவலம ணுத்திரள்வெ ளிச்சமலர்
நாளமுநி லைப்பெறுமரோ (18)

நுசுப்பு

14 சீறரவும் பைங்கொடியுங் கொம்புமதன்
மெய்யுமுட றேய்பிறையு நூலும்பிடியு
மீறுதுடி யுஞ்சவலை யுங்குளிரு சிங்கமும்
வியன் குழவி யுங்ககனமுந்
தேறுகணை யுங்கமுகு மாலையுநு சுப்பது
சிறுத்துவளை வாய்மெலிவு கொண்
டாறிமுலை மீறிடிலொ சிந்திடவ சைந்திதைய
மஞ்சவுறும் வஞ்சகமதே. (19)

கடிதடம்

15 மாக்கடித டக்குவமை தாமரைப சுஞ்சுனைபொன்
மானுறுகு ளம்பரசிலை
யாக்கமுறு தேருருள் வியாழமொடு பட்டமு
மரும்பியவி ருந்தமுடனே
யூக்கமுறு சேமணிப லாச்சுளையு மாமதனி
லூறியமு தங்குமிழியாய்த்
தேக்கிடவெ ழுந்துமண மேழிடமு மேகமழ்தல்
செய்யுமத சாலையுமதே (20)

தொடை, முழங்கால், கணைக்கால், பரடு, குதிகால்

16 நாட்டு சகுனம் புளினம் பூவுறு திரட்சிகுட
நல்கு குமிழிக் குலமரோ
சூட்டிய பிடிக்கை யிளவாழை பளிங்கிட்டிலகு
தூண் டொடை முழச்சரண விளக்
கீட்டலவன் றந்துகணைக் காலதுவ ராலிஞெடெக்
காளமுறு தூணிமத்தம் பூக்
காட்டிய தராசு பரடாங் குதிகள் பந்துமலர்
கண்டவொரு செண்டு பெறுமே (21)

புறவடி, கால்விரல், கால்விரல் நகம், உள்ளங்கால்

17 நூலெழுது பொத்தகமு மாமைமுது குங்கலமு
நோக்குவளை யும்புறவடி

கோலியமு ருக்கமுகை செம்பவள மேவிரல்
குறிக்குமுகிர் வெண்மதியமு
மாலினினி ரைத்தகழு நீரிதழு முத்துமுறும்
வாய்ந்திலகு முட்சரணமே
சாலுமுறும னிச்சமனத் தூவியொட சோகிசைபஞ்
சம்பயமு மாந்தளிருமே (22)

பெண்ணின் நடை, சாயல், மேனி, குரல்

18 அன்னமொடு பெண்பிடிந டைக்குவமை சாயன்மயி
லாரமுத மேனிகழையே
....
காடைகள்ச கோரமலியும்
பன்னுகிர வுஞ்சமிவை யெண்குரல்கள் சங்கமொடு
பண்ணளிகள் சார்குல வுமே (23)

மகளிர் சிறப்புவமை

19 வாணியயி ராணிமலர் மின்னவனி மாதுசத்திய
வாய்மையொடு ருக்குமணியே
நானில்வரு சீதைரதி கங்கையொட ரம்பையர்க
ணல்லவடி வேலன் மனையார்
கோனுதம யந்தியொட ருந்ததிது ரோபதைமெய்க்
குந்திமுத லோருவமையாம்
பேணுமலர் பொன்றரளங் கண்முதல வேயருமை
பேசுமொழி யாழுவமையே (26)

பெண்டிரின் பண்புகட்கு உவமைகள்

20 தாய ருளடி யாள்பணி
யாய வழகு கமலமான்
றூய பொறுமை யவனிமான்
மேய கலவி வேசையே (36)

ஆடவர்க்கு உவமை

21 மடவியர்க் குவமை
தொருமியற் றெருகையி
னடைவுசொற் றனமா
னுடைமைசொற் றிடுவோம் (44)

ஆடவர் உறுப்புகள்

22 கண்ணகங்கை யுந்திமுகம் வாய்சரணங் கஞ்ச
மெண்ணுமுக மாமதியு மேறுதுடி பம்பை
நண்ணுமலை தூணெழுந றும்புயங்கண் மீசை
விண்ணுலவு மீட்டிகணை வாங்குசமு தாடே (45)

வாய், பல், சொல், சாயல், குரல்.

23 வாய்கனிபன் முத்துவரி வண்பவள மென்சொ
லாயினிமை கொண்டபொரு ளியாவுமுனி சொல்லே
சாயலிடி சிங்கமொடு தும்பிபகர் சொல்லே
சேயவுரு மேகமரி யானைபுலி யாளி (46)

வேகம், கோபம், கொடை உவமைகள்

24 வேகமது மாச்சரப மெய்க்கருடன் வாயு
வாகுமனங் கோபமழல் சேற்கொடையைந் தாரு
வேகமணி யான்கமலஞ் சங்கநிதி வள்ள
லாகுமைவர் மான்மகன்பொன் னேன் முருகன் வேளே
(47)

ஆடவர் பெயர், கை, மார்பு

25 கன்னனெடு சீவகன் முதற்பெயர்க ளாகு
மன்னவய னும்பெறு மழித்தலர னெப்பா
மன்னுசன்கை வச்சிரத்தண் டஞ்செகங்கண் மார்பா
முன்னிய 'கணுடியொடு' முண்டகமு மாமே. (48)

மாதர், ஆடவர் உவமை

26 சொன்னமட மாதருவ மானமவை சொற்ற
னன்மையல வேசிலவு நன்மைபெறு மூரு

வன்னவயி ரத்தினுறு தூணெநிக ராகு
மன்னிர்தமி யானைபரி சேனையவரா மே (49)

ஆடவர் பண்பு, உவமை

27 பகைக்கு நஞ்சரி கால னனலிடி
நகைக்கு வெண்மதி நன்முத்த மாலையே
மிகைக்கு மேருவுந் தீபமு மாவரே
தொகுக்கு நண்பினிற் சொல்லைவ ராவரே (52)

உவமைத் தொகுப்பு நெறி

28 உவமைப்பொரு ளுலகினுற் ஞேருறும் பொருளுக்
கவையுளார்க் கொப்ப வமைந்தவன்றி வேறின்றே
யிவைபலவு முவமித்தன முன்னேரியற் படியு
முவையிலி யாமேசிலவு முரைத்தனமொண்
பொருளாயே (54)

பொருள் அகரநிரல்

(எண் : பக்க எண்)